Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 05 வெள்ளிக்கிழமை (20.12.2013) பக்கங்கள் 20 ஓசை – 080

## ஆளுநருடன் பேசமறுக்கும் முதல்வர்; வடக்கு மாகாணசபையின் கதி என்ன?



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மக்களின் நன்மை கருதியும், எதிர்காலத்தில் மாகாண நிர்வாகத்தை சீராக இயக்கும் வகையிலும் முதல்வர் விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அழைப்பு விடுத்தபோதிலும் அந்த அழைப்பை முதல்வர் தட்டிக்கழித்து விட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண சபையின் பல்வேறு நிர்வாக விடயங்கள் தொடர்பாக நல்லிணக்கமான முறையில் கலந்துரையாடும் வகையில் ஆளுநர் இரண்டு கடிதங்களை ஏற்கனவே முதல்வருக்கு அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த இரண்டு கடிதங்களுக்கும் முறையான பதிலெதுவும் முதல்வரிடமிருந்து கிடைக்காத நிலையில் கடந்த 17 ஆம் திகதி மூன்றாவது கடிதத்தை ஆளுநர் அனுப்பிய தாகவும் தெரியவருகிறது.

இந்தக் கடிதத்தில் நேற்றைய தினம் (19 ஆம் திகதி) அல்லது அதற்கு பின்னர் ஆளுநரின்

19 ஆம் பக்கம் பார்க்க



## தெரிவுக்குழுவின் பணிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா சமர்ப்பித்த யோசனைக்கிணங்க தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய அரசியல் அமைப்பை தயாரிக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் பணிக்காலத்தை இன்னும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் நாடாளு

19 ஆம் பக்கம் பார்க்க

## மத்திய அரசுடன் மட்டுமல்ல மாகாண அரசுடனும் இணக்க அரசியல்

(கொழும்பு)

மத்திய அரசுடன் மட்டுமல்லாது மாகாண அரசுடனும் இணக்க அரசியலை முன்னெடுக்கவே நாம் விரும்புகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சூழலில் தமிழ் கட்சிகள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதுடன், நாம் மத்திய அரசுடன் மட்டுமல்லாது மாகாண

19 ஆம் பக்கம் பார்க்க



## எச்.ஐ.வி. தொற்று 51 சிறுவர்களுக்கு

**வெளியாகியது அதிர்ச்சித் தகவல்**

(கொழும்பு)

அண்மையில் சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் படி இலங்கையில் 51 சிறுவர்கள் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலருக்கு அவர்களின் தாயிடமிருந்தே பரவியுள்ளது. 2010 ஆம் ஆண்டு பிறந்த 3 சிறுவர்களும் 2012 ஆம் ஆண்டில் பிறந்த 6 சிறுவர்களும் இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதம் வரை 12

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை தொடர்பான தீர்மானம் பிரித்தானியாவின் பரிசீலனையில்

(கொழும்பு)

யுத்தக் குற்றம் தொடர்பாக பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் சாதகமான முறையில் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கை தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றுவதற்கு பிரித்தானியா தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

மார்ச் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக



தீர்மானம் நிறைவேற்ற பிரித்தானியா ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவது குறித்து இப்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக பிரித்தானிய பொதுநலவாய நாடுகள் விவகார அமைச்சர் ஹியுகோ ஸ்வெயர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைமைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## கணக்கெடுப்பு இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் உட்பட மோதல் நிலை காரணமாக 1982 ஆம் ஆண்டு தொடக்கம், காணாமற் போனவர்கள் மற்றும் சொத்துக்களுக்கான சேதம் தொடர்பில் புள்ளி விபரங்களை சேகரிக்கும் பணிகள் இன்றுடன் நிறைவுபெறவுள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசில் பரீட்சையை கைவிடத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படமாட்டாது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையானது மாணவர்களுக்கு அதிக மனஅழுத்தங்களை ஏற்படுத்துவதாக பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கண்டனங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி; நியமனம் வழங்க உறுதிமொழி

08



கௌரவம்

10



அதிர்ஷ்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதாரத் தொண்டர்கள் மேற்கொண்டுவந்த பணிப்புறக்கணிப்பை அடுத்து அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதாக உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டுமெனக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் பணிப்புறக்கணிப்பை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த நிலையில் அதற்கு வைத்தியசாலையில் கடமையாற்றும் பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவைத் தெரிவித்து வந்த நிலையில் நேற்று ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து தற்போது கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்களில் க.பொ.த. சாதாரணதரம் வரையான கல்வித்தகைமையுடைய 80 பேருக்கு நிரந்தர நியமனமும் மிகுதியான 126 பேருக்கு நிபந்தனை அடிப்படையில் நியமனமும் வழங்கப்படுவதுடன், 126 பேரும் அமைச்சினால் கோரப்படும் கல்வித்தகைமையை பூர்த்திசெய்யும் பட்சத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து

19 ஆம் பக்கம் பார்க்க

## பெறுபேறுகளை வெளியிடுங்கள்; பல்கலை மாணவர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டபீட மாணவர்களே நேற்றுப் பிற்பகல் பல்கலைக்கழக வளாகத்தினுள் பதாதைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக உபவேந்தர் அலுவலகத்தின் முன்னால் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டபீட 2 ஆம் வருட, 3 ஆம்

19 ஆம் பக்கம் பார்க்க



எண்சோதிடப்படி
2014
உங்களுக்கு எப்படி?

7 ஆம் பக்கத்தில்

# தேவைகள் நிவர்த்தியானதால்; மீள்குடியமர்ந்தோர் மகிழ்ச்சி

(நெல்லியடி)

வள்ளுவர் சனசமூக நிலையத் தலைவரும், வலிகாமம் வடக்கு ஈ.பி.டி.பி. பிரதேசசபை உறுப்பினருமான சு.மணிராசாவின் பெருமுயற்சிகளின் காரணமாக தாம் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டுள்ளதாக மாவிட்டபுரம் தெற்கு ஜே/232 பிரிவுக்குட்பட்ட மீள்குடியமர்ந்த மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக இடம்பெயர்ந்து பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து தற்போது மீள்குடியமர்த்தப்பட்டுள்ள இம்மக்களின் பல் வேறு தேவைகளை பெற்றுக்கொடுத்தமையையிட்டு இப்பகுதி மக்கள் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான தற்காலிக வீடுகள், நிரந்தர வீடுகள், குடிநீர் வசதி, குழாய்க்கிணறுகள் அமைத்தல், மின்சார வசதிகள் புதிதாகப் பாதை அமைத்தல், செப்பனிடுதல், அகலமாக்கல் போன்ற பல் வேறு வசதிகளை மேற்கொண்டமையினால் இம்மக்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர். (17)

# பொதுக்கூட்டம்

வடமாகாண அரச சேவை பட்டதாரி அதிகாரிகள் சங்கத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், விசேட விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் கலந்து கொள்வார்.

வடக்கு மாகாண அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் அபிவிருத்தி அதிகாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடலும், வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான புதிய எண்ணக்கருக்களை இனம் காணுதலும், அபிவிருத்தி அதிகாரிகளின் செயற்திட்ட விருத்திக்கான திட்டங்களை விருத்தி செய்தலும் போன்ற செயற்பாடுகளுடன் 2012 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமாகாண அரச சேவை பட்டதாரிகள் அனைவரும் இதில் கலந்து கொள்வதுடன், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் கலந்துகொள்ள முடியும் என சங்கத்தின் செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (137)

# இரு நூல்கள் வெளியீடு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் ந.மயூரரூபனின் 'சொற்குறியம்', த.அஜந்தகுமாரின் 'படைப்பின் கதவுகள்' (இலக்கியக் கட்டுரைத் தொகுதிகள்) ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறும். (18)

# கலையரங்கத் திறப்பும் நத்தார் இன்னிசையும்

(சாவகச்சேரி)

அமெரிக்கன் சிலோன் மிஷன் நுணாவில் திருச்சபையின் கலையரங்கத் திறப்பு விழாவும், நத்தார் இன்னிசை ஆராதனையும் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு திருச்சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சபைக் குருமுதல்வர் வணக்கத்துக்குரிய பி.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சி.ஏ.சி.எம். தலைவர் வண.இனோக் புனிதராஜா, இ.தேவசகாயம் பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நுணாவில் கிராம அலுவலர் செல்வி.த.தங்கராசா சி.ஏ.சி.எம். செயலாளர் வண.பி.தேவதாஸ், சி.ஏ.சி.எம். யாழ்.பிராந்திய தலைவர் வண.வி.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (11)



(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தியசாலை வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 'கார்கில்ஸ் சதுக்கம்' இன்று முற்பகல் 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நான்கு மாடிகளைக் கொண்ட இந்தக் 'கார்கில்ஸ் சதுக்கத்தில்' சுப்பர் மார்க்கட், ஓய்வு விடுதிகள், தியேட்டர், விளையாட்டுப் பகுதி மற்றும் பல பிரிவுகள் உள்ளடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (பா, இ)

# கொடுப்பனவு இல்லாததால்; பால் உற்பத்தியாளர் பட்டினியில்

(முழங்காவில்)

பூநகரி, முழங்காவில், முக்கொம்பன், கிராஞ்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 75 இற்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு அரைமாதக் கொடுப்பனவான ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தொகை உரிய வகையில் வழங்கப்படாமையால் பால் உற்பத்தியாளர்களின் குடும்பங்கள் பட்டினியை எதிர்நோக்குவதாக மேற்படி கிராம பால் உற்பத்திச் சங்கங்களின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் 15, 30 ஆம் திகதிகளில் கால்நடை திணைக்களத்தினால் பூநகரிப் பகுதி வைத்திய அதிகாரியின் சிபார்சுக்கு இணங்க கொடுப்பனவு தமக்கு வழங்கப்பட்டு வந்தது.

எனினும், தற்போது நிர்வாகத்திலுள்ள தலைவர், செயலாளர் ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவே கொடுப்பனவு வழங்கப்படாது வந்தது. இதனை மாற்றி அமைக்க முற்பட்டதால் தாம் தமக்குரிய கொடுப்பனவை உரிய காலத்தில் பெற முடியாது கால் நடை கூட்டுறவுச் சங்கத்துக்கு அலைந்து திரிவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமக்கான இக்கொடுப்பனவு கிடைக்காமையால் தமது குடும்பத்தின் நாளாந்த தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாமல் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு வழமை போன்று தமக்குரிய கொடுப்பனவை 15, 30 ஆம் திகதிகளில் பெறக்கூடியதாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (112)






# வாசனைத் திரவிய ஏற்றுமதி அதிகரிப்பு

இந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 40.38 சதவீதத்தால் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கராம்பு ஏற்றுமதி 223.35 சதவீதத்தாலும், மிளகு ஏற்றுமதி 81.82 சதவீதத்தாலும், மருத்துவ எண்ணெய்யின் ஏற்றுமதி 22.5 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2488 திகதி 18-12-2013

ஆங்கில எழுத்து: D

வெற்றி எண்கள்: 22 24 54 59

போனஸ் இல: 53

ஜக்பொட் பரிசு ரூ.18,290,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 251423 | 20/- | 5,028,460/- |
| 2 இல | 18053 | 100/- | 1,805,300/- |
| 3 இல | 368 | 1,000/- | 368,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10168 | 40/- | 406,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 641 | 1,000/- | 641,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,290,450/- | - |
| 1 இல + போனஸ் இல | 11947 | 100/- | 1,194,700/- |
| 2 இல + போனஸ் இல | 583 | 500/- | 291,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 508 | 200/- | 101,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 293729 | | 12,691,280/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013.12.21 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 18,976,475/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/3112)



Fernando Best Vision

Optical (Vavuniya Optical)

வவுனியா ஒப்டிக்கல் எனும் பெயர் தற்போது

பெர்னான்டோ பெஸ்ட் விஷன் ஒப்டிகல்

எனும் பெயருடன் கிளிநொச்சியில்....

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு நீங்கள் பெற்றுக் கொள்ளும் சகல விதமான மூக்குக் கண்ணாடிகளுக்கும் 25% விலைக் கழிவினைப் பெற்றுக் கொள்ளுங்கள்

இச்சலுகையினை முன்னிட்டு
சனி, ஞாயிறு தினங்களிலும் ஸ்தாபனம் திறந்திருக்கும்

பெர்னான்டோ பெஸ்ட் விஷன் ஒப்டிகல்
டிப்போ வீதி, கனகபுரம், கிளிநொச்சி

(C/1970)



'இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்'

"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!


# ஹெல்தி லங்கா இளைஞர் அணியின்

# மதுசாரத்திற்கு எதிரான மாநாடு




(யாழ்ப்பாணம்)


ஹெல்தி லங்கா மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் மதுசாரத்திற்கெதிரான மாநாடு நேற்றுமுன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. காலை 11 மணியளவில் அணியின் தலைவர் தலைமையில் இடம் பெற்ற இம் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

சமய தலைவர்களின் ஆசியுரையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள், சமூக அபிவிருத்தி தொண்டர்கள், சமூக சேவை நிறுவனங்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தற்போதைய இளைய சமூகத்தினரின் நடவடிக் கைகளும், அவர்களின் மதுப் பழக்கமும் அதனால் ஏற்படக்கூடிய சமூக சீரழிவுகள் மற்றும் குடும்பச் சீரழிவுகள் குறித்தும் இம்மாநாட்டில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இதன்போது 'தமிழ் மக்களின் வாழ்வியல் விருத்திக்காக பாடுபடும் அனைவருக்காகவும்' என்ற தலைப்பில் ஹெல்தி லங்கா மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் தலைவரினால் மகஜர் ஒன்றும் வெளியிடப்பட்டு முதன்மை விருந்தினர். சி.வி.விக்னேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது. (இ)

# பாடசாலையின் கல்விச்செயற்பாடுகளுக்கு பழைய மாணவரின் பங்களிப்பு அவசியம்

## வடமாகாண கல்வி அமைச்சர்



(மானிப்பாய்)

ஒரு பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை மேம் படுத்துவதற்கு அப்பாடசாலையின் பழைய மாணவர்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அச்செயற்பாடுகள் ஏனைய மாணவர்களுக்கும் முன்னுதாராணமாக அமையும் என வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

யாழ்.இந்துக் கல்லூரியின அவுஸ்ரேலியா, சிட்னி பழைய மாணவர் சங்கத்தின் கல்வி எங்கள் மூலதனம் செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாண பாடசாலைகளின் நூலகங்களுக்கான நூல்களினை கையளிக்கும் 2ஆம் கட்டசெயற்றிட்ட நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பழைய மாணவர்களினால் முன்னெடுக்கப்படும் இது போன்ற ஆக்கத்திறன் மிக்க செயற்பாடுகள் மூலமே இழந்த எம் இனத்தின் சுவடுகளை மீளப் பெற்று நாம் கல்வியில் முன்னேற்றமடைய முடியும். அத்துடன் இவ்வாறான முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை. கல்வித்துறையில் நாம் இழந்தவற்றை மீளப்பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கு இவ்வாறான நல்ல கைங்கரியங்கள் கைகொடுக்கும். முன்பெல்லாம் நூலகங்களை தேடி நெடுந்தூரம் சென்றிருக்கின்றோம். ஆனால் தற்கால மாணவர்களுக்கு இவ் வரப் பிரசாதங்கள் கை கிட்டியுள்ளன. இதனை சாதகமாகப் பயன்படுத்தி மாணவர்கள் சாதிக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மகா வித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கான நூல்களை யாழ். இந்துக் கல்லூரி அவுஸ்ரேலியா, சிட்னி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் யாழ். இந்து அதிபர் வீ.கணேசராஜா வட மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் கையளிக்க வட மாகாணக் கல்வி அமைச்சர் பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் என கல்விச் சமூகத்தினர் கலந்து கொண்டனர். (48,114)

# மனோ கணேசனின் பிறந்த நாள் பரிசு




பிறந்த நாள் வாழ்த்துச் சொன்ன ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மனோ கணேசன் அதிரடி வைத்தியம் செய்ய முற்பட்டிருக்கிறார்.

'வடக்கு மாகாணசபையில் முதல்வருக்கும் ஆளுநருக்குமிடையில் நடக்கின்ற அக்கப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வாருங்கள். இந்த நிலைமை நீடித்தால் சில வேளை முதல்வர் விக்கினேஸ்வரன் தன்னுடைய பதவியைத் துறந்து விடக்கூடும்' என்ற அபாய எச்சரிக்கை அது.

ஏனென்றால் முதல்வர் விக்னேஸ்வரன் பாதி அளவுக்கு ஆன்மீக வாதி. நெருக்கடிகள் கூடினால் துறவறத்தை அவர் நாடக்கூடும்.

ஜனாதிபதிக்கும் நிலைமையின் தாற்பரியம் புரிந்திருக்கிறது.

விக்கினேஸ்வரன் பதவி விலகினால் அது நாட்டுக்கே விக்கினமாகி விடும் என்று சொல்லியிருக்கிறார் ஜனாதிபதி.

கூட்டமைப்பு வெற்றியடையும் என்று தெரிந்து கொண்டு தேர்தலை நடத்திய தனக்கு அது ஆட்சி நடத்த வேணும் என்றும் தெரியும் என அவர் மேலும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், தான் ஒரு பனங்காட்டு நரி. சாதாரண சலபலப்புக்கெல்லாம் மிரளமாட்டேன் என்பதையும் நாசுக்காக அவர் சொல்லியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இவை ஒரு புறமாக இருக்கட்டும்.

மனோ கணேசன் இப்படி அரசாங்கத்துக்கும் மாகாணசபைக்கும் இடையே தொடர்பாடலைச் செய்திருப்பது முக்கியமான ஒரு விடயம்.

'நாட்டில் புதிய நெருக்கடிகள் உருவாகக்கூடாது' எனத் தான் விரும்புவதாக மனோ கணேசன் சொல்லியிருப்பதை நாங்கள் கவனிக்க வேண்டும்.

ஆனால், இதை மனோகணேசன் பல சந்தர்ப்பங்களில் தமிழ்க் கூட்டமைப்புக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அரசாங்கம் பல விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை. அதைப்போல பல ஏற்றுக்கொள்ளல்களையும் அது செய்ய வேண்டும்.

அதே அளவுக்கு உண்மை தமிழ்க்கூட்டமைப்பும் பல ஏற்றுக்கொள்ளல்களைச் செய்ய வேண்டும். பல விட்டுக்கொடுப்புகளையும் செய்ய வேண்டும்.

இதற்கான இடைத்தொடர்பாளராக மனோ கணேசன் நல்லதொரு பாத்திரத்தை வகிக்கலாம்.

அப்படியாக அவர் நடந்து கொண்டால் அவருடைய மதிப்பு ஒரு கட்சித் தலைவர் என்பதற்கு அப்பால் மேலும் உயரும்.

ஆனால், மனோ கணேசனின் கூட்டாளிகள் அதற்கு எந்த அளவுக்கு இடமளிப்பார்கள் என்று தெரியவில்லை.

அடிப்படையில் நல்ல மனம் படைத்தவர் மனோ கணேசன் என்று சொல்லப்படுவதுண்டு.

அவருடைய அரசியற் கூட்டாளிகளோ மனோ கணேசன் நினைப்பதற்கும் கதைப்பதற்கும் எதிரானவர்கள்.

'நாட்டில் புதிய நெருக்கடிகள் உருவாகக்கூடாது' என்று மனோ கணேசன் சொல்கிறார்.

அவருடைய அரசியற் கூட்டாளிகளோ இலங்கை தங்களுடைய நாடே இல்லை என்பது போல நடந்துகொள்கிறார்கள். நாட்டில் புதிய நெருக்கடிகளை உருவாக்கும் விதமாகவே நடந்து கொள்கிறார்கள்.

தேர்தற் காலங்களில் மனோ கணேசனை அவர்கள் தங்களின் கச்சேரிக்குப் பக்க வாத்தியம் வாசிக்கிற ஒருவராகக் கொண்டு வந்து மேடையேற்றுகிறார்கள்.

பிறகு, காரியம் முடிய மெல்லக் கை கழுவி விடுகிறார்கள்.

பாராளுமன்றத் தேர்தலுக்கு அழைத்து வரப்பட்ட மனோ கணேசன், பிறகு மாகாணசபைத் தேர்தலுக்கு அழைக்கப்பட்டார்.

மனோவுக்கும் வேறு வழியில்லை. கொழும்பில் வாக்குகளைச் சேகரிக்க வேண்டும் என்றால், அங்குள்ள யாழ்ப்பாணத்தமிழர்களின் கையும் காலும் தேவை.

அதற்கு இங்கே வந்து தமிழ்க் கூட்டமைப்புக்கு ஒத்து ஊதினால்தான் காரியம் ஆகும்.

அப்படியிருந்தும் போன தடவை வெள்ளவத்தையிலிருக்கும் யாழ்பாணத்தார் மனோவைக் கை நழுவ விட்டார்கள்.

என்றாலும் அவர் விடுவதாயில்லை. ந[illegible]யும் த[illegible]யும் அவரை விடவில்லை.

இன்னும் காலைச் சுற்றிச் சுற்றியே வருகிறார்.

மனோ கணேசனை வைத்து, வடக்குக் கிழக்கில் இருக்கும் மலையக மக்களின் வாக்குகளை அள்ளிக்கொள்கிறது கூட்டமைப்பு.

பாவம் மனோ கணேசன்.

ஆசைகளைத் திருப்திசெய்வதில் அமைதி இல்லை. மட்டுப்படுத்துவதில்தான் அமைதி உள்ளது. - ஹிபர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாசிப்பின் மூலம் வாழக் கற்றல்!

வாசிப்புப் பழக்கம் அருகி வருவது இன்று பொதுவாகத் தெரியும் குறைபாடு. அதற்குக் காரணங்களும் உண்டு. தொலைக்காட்சி, வீடியோ கேம்ஸ் இல்லாவிட்டால் பாடப் படிப்பு ரியூஷன் என்று சிறுவர்களின் நேரம் வாசிப்புக்கு ஒதுக்க முடியாததாகவே ஆகிவிட்டது. பெரியவர்களுக்கும் நேரமில்லை. கதை கேட்கும் பழக்கமும் கிட்டத்தட்ட வழக்கொழிந்து வருகிறது.

கதை கேட்பதன் மூலமும் வாசிப்பதன் மூலமும் குழந்தைகள் கற்பனை செய்யப் பழகுகிறார்கள். இதுதான் அவர்களைச் சுயமாக சிந்திக்கவும் கற்றுக் கொடுக்கிறது. நம் சிந்தனை உருவாகி வருவதே சிறு வயதில் கேட்ட வாசித்த கதைகளின் வழியாகத்தான் என்பதை இன்று மொழியியலாளர்கள் விளக்குகிறார்கள்.

நாம் அறியாமலே கூட நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்துவதில், நமது ஆளுமை உருவாக்கத்தில் கலை இலக்கியங்களின் பயன்பாடு இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. கலைகள் இல்லாமல், கதைகள் இல்லாமல் மனிதகுலம் இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்க முடியுமா என்று கேட்டால், இல்லை என்பது தான் பதில்.

மனிதமனம் எப்போதெல்லாம் பயமும் திகைப்பும் கொள்கிறதோ, எப்போதெல்லாம் சந்தோஷமும் கொண்டாட்டமும் கொள்கிறதோ, எப்போதெல்லாம் துக்கமும் நிர்க்கதியும் கொள்கிறதோ அப்போதெல்லாம் அவை கதைகளைச் சிருஷ்டிக்கின்றன. இப்படித்தான் கதைகள் உலகிற்கு வந்திருக்க வேண்டும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இலக்கியம் மனித வாழ்வைப் பண்படுத்தியிருக்கிறது; மனிதனை மேம்படுத்தியிருக்கிறது; மனிதனாக வாழச் செய்திருக்கிறது. நிதானமாக யோசித்தால் இதை நாம் ஒவ்வொருவரும் உணர முடியும். கதைகள் இலக்கியங்களைப் புறக்கணிப்பதால் நாம் கலாசாரத்தையே இழக்கிறோம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

மனிதன் தன்னை மேலும் மனிதனாக்கிக் கொள்வதற்கான ஆக்கத்திறன்களை அவை வழங்கியிருக்கின்றன. மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையையும் இலக்கியங்களே நமக்கு அளிக்க முடியும்.

அடுத்த மனிதரை எந்த விதத்திலும் இம்சிக்கக் கூடாது. நமக்கிருக்கும் இன்பங்கள், துன்பங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், சலிப்புகள், சங்கடங்கள் எல்லாமே ஒவ்வொரு மனிதருக்குமானவைதான். பூமியில் வாழவும், சுவாசிக்கவும், கடவுளை வணங்கவும், கஷ்டங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமையும் நம் சக மனிதனுக்கும் இருக்கிறது என்பதை உணர்த்திக் கொண்டிருப்பவை இலக்கியங்களே.

மானுட வாழ்வு, பிரபஞ்சத் தோற்றம், மனுக்குலத்தின் அல்லாட்டங்கள், பல்வேறு உயிர்களின் வாதை, சிருஷ்டியின் உள்ளீடாக உறைந்திருக்கும் வன்முறை, பேரழிவு... இவை பற்றிய ஆய்வுப் பார்வைகளெல்லாம் இலக்கியங்கள் நமக்குக் கடத்தித் தந்தவையே.

அன்பு, கருணை, அறம் எனப் பல்லாயிரமாண்டுக் கால மரபு உருவாக்கிய விழுமியங்களை நாம் மீண்டும் மீண்டும் கண்டடைதல் இலக்கியங்கள் மூலமாகவே சாத்தியமாகிறது.

துயரத்தை, அவமானத்தை, புறக்கணிப்பை, அநீதி அனைத்தையும் இனிதாக்கிக் கொள்ளும் ஒரு மாயச் செயற்பாட்டைக் கொண்டிருப்பவை அவை. இலக்கியம் ஒரு சக்தி. நமக்குள் அது வந்து சேர, வாழும் வழி பிடிபடும். தன்னலத்தைப் பின்தள்ளி விடுவதும், பிறர் துயர் துடைக்க இந்த வாழ்வைப் பயன்படுத்துவதுமே உயர்வென்று இலக்கியங்கள் வலியுறுத்தும்.

நம் சிறுவர்கள் நல்ல மனிதர்களாக வளர்வதற்கு, பாடப் புத்தகங்களுக்கு வெளியே தேடி வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துவோம். இது வளர்ந்தவர் ஒவ்வொருவரினதும் கடமை. - ஆசிரியர்.

# ஐந்து மணி நேரம் மட்டும் பணியாற்றும் அரச ஊழியர்கள்

## எஸ்.எம்.எஸ்.மூலம் முறையிட வாய்ப்பு

அரச ஊழியர்கள் 5 மணிநேரம் மட்டுமே வேலை செய்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அரச அலுவலகங்களில் நிலவும் அலட்சியங்கள் தொடர்பாக எஸ்.எம்.எஸ். மூலம் புகார் தெரிவிக்கும் முறை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் நவீன் திசாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அரச முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு உட்பட தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களின் சேவையை மதிப்பீடு செய்து அவர்களுக்கு ஊக்குவிப்பு (போனஸ்) கொடுப்பனவுகளை வழங்க வேண்டும். இதன் ஊடாகவே அவர்களிடமிருந்து தரமான சேவையை எதிர்பார்க்க முடியும்.

அரச சேவையில் மறுசீரமைப்பு செய்வது தொடர்பாக எமது அமைச்சு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அரச ஊழியர்களின் கடமைகள் தொடர்பாக எமது அமைச்சு நடத்திய கணக்கெடுப்பின் போது அரச ஊழியர்கள் வேலைநேரம் குறித்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 5 மணி நேரம் மட்டுமே ஒரு அரச ஊழியர் கடமை புரிந்தால் அரச நிர்வாக சேவையின் தரம் எவ்வாறு இருக்கும் என்பதை அறிவோம். இதனை முற்றாக மாற்ற வேண்டும் என்பதற்காக முதற்கட்டமாக அரச நிறுவனங்களில் இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அத்துடன் அரச ஊழியர்களின் கடமை நேரம் தொடர்பாக அறிவுறுத்தல் நடவடிக்கைகளும் செய்யப்படவுள்ளன.

முதற்கட்டமாக குருநாகல் மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களில் இவை முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் அரச நிறுவனமொன்றுக்கு செல்லும் ஒருவர் தமக்கு தேவையான வேலையை செய்வதற்கு முடியாது போகுமிடத்து அதனை எஸ்.எம்.எஸ். குறுந்தகவல் ஊடாக முறைப்பாடு செய்து தேவையான தகவலைப் பெறுவதற்கான முறை ஒன்று ஜனவரி மாதம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அத்துடன் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது அரச ஊழியர் ஒருவரின் சம்பளம் மிகவும் குறைவானதாகவே காணப்படுகிறது. 40,000 ரூபா வரையிலான குறைந்த சம்பளத்தை பெறுகின்றனர். வெளிநாடுகளில் அரச ஊழியர் ஒருவரின் கடமைகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு அவருக்கு போனஸ் வழங்கும் நடவடிக்கையும் உள்ளன. இதே போன்று இலங்கையிலும் போனஸ் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்யாதது தவறு

## பிரதியமைச்சர் சரத்வீரசேகர

(கொழும்பு)

புலிகளை அழித்த கையோடு கூட்டமைப்பையும் தடை செய்யாதது தாம் விட்ட தவறு என்றும் முன்னாள் போராளிகளைப் போல் இவர்களையும் கைதுசெய்து புனர்வாழ்வு அளித்திருக்க வேண்டும் என்று பிரதியமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவிக்கையில், "தேசிய வீரன்" என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தச் சபையில் பேசுகின்றார். குறிப்பாக, ஹிட்லர் அழிக்கப்பட்ட பின்னர் நாசி கட்சி தடை செய்யப்பட்டது. எகிப்தில் முபாரக்கின் கட்சியும் தடைசெய்யப்பட்டது. புலிகளை அழித்த கையோடு நாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. போர் முடிவடைந்த பின்னர் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டது போல் இவர்களையும் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தி புனர்வாழ்வு அளித்திருக்க வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு துணைபோகமாட்டார்கள் என்றும், ஈழம் அமைக்க முயற்சிக்கமாட்டார்கள் என்றும் கூட்டமைப்பிடம் அரசு உறுதிமொழி ஒன்றைப் பெற வேண்டும். இல்லையேல், அக்கட்சியைத் தடைசெய்ய வேண்டும். யாழிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறு கூட்டமைப்பு கோருகின்றது. இன்று மேற்குலகில் புலி செயற்பாட்டாளர்கள் இருக்கின்றனர். தமிழ் நாட்டிலும் புலி ஆதரவாளர்கள் செயற்படுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரிவினைவாதக் கொள்கையை முன்னெடுக்கிறது. என[illegible], அக்கட்சியின் ஆட்சி இருக்கும்வரை வடக்கி[illegible]ருந்து இராணுவத்தை அகற்றக் கூடாது. அவ்வாறு அகற்றுவதானது ஈழத்துக்கு வழியமைக்கும் செயலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புனர்வாழ்வளிக்கப்படுபவர்களுக்கு சிங்கள மொழித்தேர்ச்சி சான்றிதழ்

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வுமையத்தில் சிங்கள மொழி தேர்ச்சி கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துகொண்ட புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் ஒரு தொகுதி முன்னாள் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை கற்கை நெறிக்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

சிங்கள மொழி தொடர்பாடல் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு விசேடமாக வடிவமைக்கப்பட்ட இப்பாட நெறியானது வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வுமையத்தில் இடம்பெற்றது. அரச கரும மொழி மற்றும் பயிற்சி நிலைய போதனா ஆசிரியர்களினால் நடாத்தப்பட்ட இவ் இரு வார கற்கைநெறியில் 98 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் இவர்களுள் 22 பேர் 90 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் போது முன்னாள் புலி உறுப்பினர் எம்.இந்திரகுமார் சிறந்த மாணவருக்கான விருதினைப் பெற்றுக் கொண்டார்.

# ஓரினப்பாலியல் தொடர்புகள் இலங்கையில் அதிகரிப்பு

## வைத்திய அதிகாரி நிஹால் எதிரிசிங்க

வெளிநாடுகளைப் போல் இலங்கையிலும் ஓரினப் பாலியல் தொடர்புகள் அதிகரித்து வருவது அவதானத்தை செலுத்த வேண்டிய விடயமாக மாறியுள்ளதாக குருணாகல் போதனா வைத்திய சாலையின் பாலியல் சம்பந்தப்பட்ட நோய்த் தடுப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி நிஹால் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஓரினப் பாலியல் தொடர்புகள் அதிகரித்துள்ளதே எச்.ஐ.வி. வைரஸ் மற்றும் எயிட்ஸ் நோய் வேகமாக பரவுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. ஆண் மற்றும் பெண் இடையிலான பாலியல் தொடர்புகளை விட நாட்டில் ஓரின தொடர்புகள் அதிகரித்து வருவதாக தகவல்கள் கிடைத்து வருகின்றன.

வெளிநாடுகளில் எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் நோய் பரவுவது குறைந்து வருகின்ற போதிலும் இலங்கையில் அந்த நோய் பரவுதல் 70 வீதமாக அதிகரித்துள்ளது.

2001ஆம் ஆண்டு 47 பேர் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்ததுடன் 2011ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 100 மடங்காக அதிகரித்தது. எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்தான சிகப்பு கோட்டில் இலங்கை தற்போது இருந்து வருகிறது என்றார்.

விடுதலைப் புலிகளின் வான் படையின் தளபதியான சங்கர் கிளைமோர் தாக்குதலில் வன்னியில் கொல்லப்பட்ட போதும் விடுதலைப் புலிகளின் வான்படையானது முள்ளிவாய்க் கால் முடிவுகள் வரை தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்ததை எவருமே மறுக்க முடியாது. ஒரு விடுதலைப் போராட்ட இயக்கமானது வான்படை கட்டமைப்பை வைத்திருப்பதை அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் எவையுமே விரும்பி இருக்க வில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாகப் பார்ப் பதற்கு முன்னர், இந்தியாவில் சங்கரிற்கு ஏற்பட்ட ஆயுதம் இறக்கும் ஆசையும், அதன் லேசாக இறக்கி விடலாம் என்று கூறியிருக்கிறார் அந்த நபர். ஆயுத வியாபார தொடர்பு இவ்வளவு விரைவாக இலேசாக கிடைக்குமென்று தான் எதிர்பார்க்கவில்லை என்று குறிப்பிட்ட நாடு கடந்த அரசாங்க அமைச்சர், இது இலேசாக கிடைத்த தில் பேரானந்தம் அடைந்தார். இதைத்தானா ஒரு பெரிய விஷயம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்? ஆயுதங்களை சப்ளை செய்ய அருமையான ஆள் ஒருவர் கைவசம் மாட்டி இருக்கிறார். உடனே புறப்பட்டு வந்தால் தேவையான ஆயுதங்களை அள்ளிக் கொண்டு சென்று விடலாம் என்று சங்கரிற்கு தகவல் கொடுத்தார் உருத்திரகுமாரின் தற்போதைய அமைச்சர்.

சங்கர் கனடாவில் இருந்து வந்தவர் என்பதால் லண்டன் செல்வதில்



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 58

**ஆயுதம் இறக்கும் ஆசை வந்தவுடன் சங்கர் இந்த அலுவ்லகத்திலிருந்து தமக்கு நெருக்கமானவர்களை தொடர்பு கொண்டார். அவர் முக்கியமாக தொடர்பு கொண்டது லண்டனில் இருந்த இருவரை. அந்த இருவரில் ஒருவர் தற்போது உயிருடன் இல்லை மற்றையவர் இப்போதும் பிரித்தானியாவில் தான் உள்ளார். இவர் தற்போது நாடுக்டந்த தமிழீழ அரசாங்க அமைப்பின் முக்கிய உறுப்பினராக உள்ளார். நாடு கடந்த தமிழீழ அரசு என்பது உருத்திரகுமார் தலைமையில் அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஒரு அமைப்பு இதில் பல பிரிவுகள் உள்ளன. இந்த அமைச்சரவையில் இவரும் ஒரு அமைச்சராக இருந்து செயற்பட்டு வருகிறார்.**

வே. அர்ச்சுணன்

விளைவுகளையும் பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.

பிரபாகரனின் இளமைக்கால நண்பன் என்பதால் இயக்கத்தில் இணைந்த நாளில் இருந்தே சங்கரிற்கு இயக்கத்தில் முக்கியத்துவம் இருந்து வந்தது. அந்த நாட்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு சென்னையில் உள்ள அடை யாரில் அரசியல் அலு-வலகம் ஒன்று இருந்தது. அன்ரன் பாலசிங்கம் பேபி சுப்பிரமணியம், போன்றவர்கள் இந்த அரசியல் அலுவலகத்தில் இருந்து செயற்பட்டனர். எல்லோரும் வந்து போகக் கூடிய இடமாக அது இருந்து வந்தது. இதைவிட மற்றொரு அலுவலகமும் இருந்தது. அங்கே வெளி ஆட்களுக்கு வந்து சொல்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. திருவான்மியூரில் இயங்கிய இந்த அலுவலகத்தை அப்போது எம்.ஓ (மிலிட்டரி ஒபிஸ்) என்று அழைப்பார்கள். இந்த அலுவலகத்திற்கு மனோ மாஸ்டர் என்பவரை விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் பொறுப்பாளராக நியமித்திருந்தார். சங்கர் கூடுதலாக நிற்பது இந்த அலுவலகத்தில்தான்.

ஆயுதம் இறக்கும் ஆசை வந்தவுடன் சங்கர் இந்த அலுவலகத்திலிருந்து தமக்கு நெருக்கமானவர்களை தொடர்பு கொண்டார். அவர் முக்கியமாக தொடர்பு கொண்டது லண்டனில் இருந்த இருவரை. அந்த இருவரில் ஒருவர் தற்போது உயிருடன் இல்லை மற்றையவர் இப்போதும் பிரித்தானியாவில்தான் உள்ளார். இவர் தற்போது நாடுகடந்த தமிழீழ அரசாங்க அமைப்பின் முக்கிய உறுப்பினராக உள்ளார். நாடு கடந்த தமிழீழ அரசு என்பது உருத்திரகுமார் தலைமையில் அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஒரு அமைப்பு இதில் பல பிரிவுகள் உள்ளன. இந்த அமைச்சரவையில் இவரும் ஒரு அமைச்சராக இருந்து செயற்பட்டு வருகிறார்.

சென்னையில் இருந்த சங்கர் தனது ஆயுதம் இறக்கும் ஆசையை இவர்களிடம் சொன்னதில் இவர்கள் லண்டனில் 4, 5 இடங்களில் விசாரித்து ஒரு தொடர்பை ஏற்படுத்தி விட்டார்கள். இவர்கள் தொடர்பை ஏற்படுத் திய நபர் ஒரு அல்ஜீரிய பிரஜை. ஆயுதங்கள் தானே

அவருக்கு சிக்கல் எதுவும் இருக்க வில்லை. பிரபாகரனிடம் விஷயத்தை கூறிய போது சந்தோசமடைந்த பிரபாகரன் சங்கரை உடனடியாகவே லண்டனிற்கு அனுப்பி வைத்தார். லண்டனில் தனது அல்ஜீரிய தொடர்பாளரிடம் சங்கரை அழைத்துச் சென்றார் இந்த அமைச்சர். அந்த அல்ஜீரியரோ இவர்கள் அனைரை யும் விட கெட்டிக்காரராக இருந்தார். இவர்கள் எந்த ரக ஆயுதம் கேட்டாலும் அடுத்து இரண்டு மணி நேரத்திலேயே காட்டி விடுவார். அதாவது ஆயுதங்கள் தொடர்பிலான பெரியளவிலான அல்பம் ஒன்றை ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த அல்ஜீரியகாரர் இவர்கள் கேட்கின்ற ஆயுதங்களை நேரடியாகக் காட்டாமல் தனது அல்பத்திலிருந்த புகைப்படங்கள் மூலம் உடனடியாக அந்தப் படத்தை கழட்டி வந்து காட்டி விடுவார். போட்டோவில் காண்பிக்கும் ஆயுதம் பற்றி அந்த ஆயுதத்தை தயாரித்தவருக்கோ அல்லது அந்த ஆயுத உற்பத்தி செய்த நாட்டிற்கோ தெரியாத புள்ளி விபரங்களை எல்லாம் சொல்லி அசத்திக் கொண்டிருந்தார் அந்த நபர்.

இவர் காட்டிய இந்த ஆயுதங்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் இந்தியாவிலிருந்த விடுதலைப் புலி களின் தலைமைக்கு (சங்கேத மொழியில்) கோட் உரையாடல்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. இந்த விடயங்கள் தொடர்பில் அன்ரன் பாலசிங்கத்துடனும், பேபி சுப்பிரமணியத்துடனும் பிரபாகரன் ஆலோசனை நடத்திய பொழுது பாலசிங்கம், யாரோ சங்கரிற்கு ஆப்பு வைக்கப்போகிறான் என்று நக்கலாக குறிப்பிட்டார். பிரபாகரனும் பேபியும் கொடுப்புக்குள் சிரித்தவாறு அண்ணைக்கு எல்லா விஷயத்திலும் நக்கலும், நையாண்டியும் தான் என்று அவரை விட்டுவிட்டு இந்த டீலை எப்படி கையாளலாம்? எப்படி அடுத்த கட்டத்தை நகர்த்தலாம் என்பது தொடர்பில் ஆலோசித்தனர்.

பின்னர் அந்த டீலை அவதானமாக கையாளுமாறு பிரபாகரனிடமிருந்து சங்கரிற்கு சங்கேத மொழியில் ஆலோசனை பரிமாறப்பட்டது. ஆரம்ப காலத்தில் புலிகள் இயக்கம் இந்தியாவில் இருந்து செயற்பட்ட காலப்பகுதியில் எந்தவொரு முடிவை எடுப்பதாக இருந்தாலும் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத் துடனும், மூத்த உறுப்பினரான பேபி சுப்பிரமணியத்துடனும் ஆலோசனை நடத்தி விட்டே அடுத்த கட்டம் தொடர்பில் முடிவெடுப்பார். ஆனால் இறுதி நாட்களில் இந்த நடை முறையை பின்பற்றாத பிரபாகரன் குறிப்பாக களமுனை தளபதிகளை யும், புலனாய்வுத் துறைப் பொறுப் பாளர் பொட்டம்மானையும் கலந்து ஆலோசித்தே சில முடிவுகளை எடுத்து வந்தார். இந்த முடிவுகள் பல கட்டங்களில் பல விபரீதமான முடிவு-களை ஏற்படுத்தியதுடன், புலிகள் இயக்கத்தை முள்ளிவாய்க்கால் முடிவு-கள் வரை இழுத்துச் சென்றதையும் யாவரும் அறிவர்.

இறுதி நாட்களில் குறிப்பாக ஆனை யிறவு படைத்தளத்தை புலிகள் தாக்கி அழித்து வெற்றி கொண்ட தைத் தொடர்ந்து பிரபாகரன் பொட்டம்மானையும், சூசையையும் முழுமையாக நம்பியதுடன் இவர்களது கருத்துக்களிற்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுத்து வந்தார். புலிகளின் மூத்த உறுப்பினரும், நீண்ட அனுபவம் வாய்ந்தவருமான பேபி சுப்பிரமணியம் என்பவரை பெரியளவில் கருத்தில் எடுத்து செயற்படவில்லை.

அன்ரன் பாலசிங்கம் உயிருடன் இருந்த காலப்பகுதியில் இராஜதந்திர ரீதியிலான பல ஆலோசனைகளை யும் விடுதலைப் புலிகள் இயக்கத் திற்கு வழங்கி வந்தார். இவரின் மறை வின் பின்னர் இந்த ஆலோசனைகளை வழங்குவதற்கு பிரபாகரனிற்கு அருகில் செல்வதற்கு எவருமே துணியவில்லை. இத்தகைய ஆலோ சனைகளை வழங்கக் கூடிய தகுதி யும், ஆற்றலும் ஓரளவிற்கு பேபி சுப்பிரமணியத்திற்கு இருந்த போதிலும் இவரை பெரியளவில் இயக்கம் இறுதி நாட்களில் கணக்கில் எடுக்கவில்லை. இவரும் தலைவரிற்கு அருகில் சென்றாலும் அவர் சொல்வதற்கு தலையாட்டிவிட்டு வருகின்ற ஒரு நிலைப்பாட்டிலேயே இருந்தார்.

அது ஒருபுறமிருக்க, சங்கரின் ஆயுதக் கொள்வனவு விவகாரத்திற்கு நாம் செல்லலாம். அல்ஜீரிய பிரஜை குறிப்பிட்ட புள்ளி விபரங்கள், காட்டிய ஆயுதங்கள் எல்லாமே சங்கரிற்குப் பிடித்து விட்டது. லண்டனில் இருந்த வாறே சகல விடயங்களையும் பிரபா-கரனுடன் பரிமாறிக்கொண்டிருந்த அதே வேளை கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் லெபனானில் இருந்து பெற்றுக்கொடுத்த ஆயுதங் களின் விலைப் பட்டியலை அனுப்பு மாறு சங்கர் கேட்டுக்கொண்டார். அந்த பட்டியலும் ஒருவாறு சங்கரிடம் போய் சேர்ந்தது.

இந்த நிலையில் விலைபேசும் படலம் ஆரம்பமானது. சங்கரிற்கும் அமைச்ச ரிற்கும் கே.பி ஏற்கனவே ஆயுதம் வாங்கிய விலைகள் தொடர்பான பட்டியல் கையில் இருந்தமையினால் ஆயுத விலைகள் தொடர்பில் மதிப் பீடு செய்வது இலகுவாக இருந்தது. அடுத்து என்ன நடந்தது? ஆயுதம் வாங்கினார்களா? அல்லது ஏமாற் றப்பட்டார்களா? அல்லது அல்ஜீரிய பிரஜை இவர்களுக்கு அல்வா கொடுத்தாரா? என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# தேர்தல்களில் வெற்றிபெற ஐக்கியதேசிய கட்சியால் முடியாது



(கொழும்பு)

மாகாண சபை தேர்தல்களிலும் முடிந்தால் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டிக் காட்டட்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களில் மேல் மற்றும் தென் மாகாணசபைகள் கலைக்கப்பட உள்ளது. முடியுமென்றால் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டிக் காட்டட்டும்.

பெரும்பான்மையான மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவளிப் பார்கள் சகல பகுதிகளிலும் வாக்காளர் அடிப்படையை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும்.

ஐக்கிய தேசியக் கட்சி எத்தனை தலைமைத்துவ பேரவைகளை அமைத்தாலும் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடனில் முன்னெடுக்கப்படும் நாட்டின் பொருளாதாரம்

## ரில்வின் சில்வா




(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் வரி, அபராதம் மற்றும் கடன் களினால் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நலனான எந்த விடயங்களும் தற்போதைய பொருளாதாரத்தில் இல்லை. இவ்வாறான நிலைமையில் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும், நிவாரணங்களை பெற்றுக் கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்தெரிந்த அதிகளவு பொலிஸார் வடக்கு, கிழக்கில் கடமை



(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அதிகளவில் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேசசாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்து வருடங்களில் சகல பொலிஸ் நிலையங்களிலும் பொதுமக்களுடன் தமிழ், சிங்கள மொழிகளில் கருமமாற்றுவது பொலிஸ்திணைக்களத்தின் இலக்காகும்.

மக்களுக்கு சிறந்த சேவையாற்றுவதற்கு மொழி தடையாக அமைவது யுத்தம் முடிவதற்கு முன்னரே இனங்காணப்பட்டது. இப்போது வடக்கு கிழக்கில் மக்களின் முறைப்பாடுகள் தமிழில் பதியப்படுகின்றன இது பெரிய சாதனையாகும். இன்னும் 5 வருடங்களில் சகல பொலிஸ் நிலையங்களிலும் சிங்களத்துடன் தமிழிலும் கருமங்களை ஆற்றும் வசதிகளை ஏற்படுத்தும் இலக்கை நோக்கி செயற்படுகின்றோம்.

தமிழ் பேசும் 240 பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை புதிதாக சேவையில் சேர்க்கப் பட்டுள்ளனர் இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில சேவையாற்றுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஒற்றுமை நோக்கிய பயணம் முறியடிப்பதற்கு சதி முயற்சி



(கொழும்பு)

ஒற்றுமையை நோக்கிய அரசாங்கத்தின் பயணத்தை மாற்றும் நோக்கில் இன்று அலரி மாளிகையின் மதில்களைச் சுற்றி பிரிவினைவாதிகள் சுற்றித் திரிகின்றனர் என்று தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் சபை உறுப்பினரும் முன்னாள் அமைசசருமான பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கத்தோலிக்க ஆயர்கள் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கை போலவே தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி போன்ற கட்சிகளும் வெளியிட்டு வரும் கருத்துக்களை நோக்கும் போது அவை மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் தேவைக்கு அமைய நாட்டை கீழ்ப்படிய இடமளிக்கும் ஆயுதம் என்பது தெரியவருகிறது.

1984 ஆம் ஆண்டு ஆயர்கள் சம்மேளனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் நாட்டில் ஜனநாயகம், சுதந்திரமில்லை எனக் கூறப்பட்டிருந்தது. அன்று அவ்வாறு தெரிவித்து புலிகளின் பயங்கரவாதம் பலமிக்கதாக மாற இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இந்த நிலையில் 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையின் மூலம் பிரிவினைவாத புலிப் பயங்கரவாதிகள் மீண்டும் தலைத்தூக்க உயிர் வாயு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டிற்கு எதிரியான மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்படுத்த இடமளிக்க வேண்டாம் என மதிப்புக்குரிய பேராயரிடம் வினயமாக கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவினைவாத புலிப் பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து ஒழித்த பிறகு கத்தோலிக்கர்களும் கிறிஸ்தவர்களும் சமாதானத்தின் குமாரனின் பிறப்பை நினைவு கூரும் நத்தார் பண்டிகையை உண்மையாக கொண்டாட முடிந்துள்ளது என்றார்.

# குழந்தைகள் மீது நேசம் இலங்கைக்கு உயர்ந்த மதிப்பெண்



குழந்தைகள் மீது நேசம் காட்டும் தெற்காசிய அரசாங்கங்கள் தெடர்பான ஆய்வில் இலங்கை மிக உயர்ந்த குறியீட்டு மதிப்பெண் பெற்றுள்ளது. இது தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு மற்றும் குழந்தைகள் உரிமைகள் மையம் என்பன வெளியிட்டுள்ள அறிக்கையை சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கடந்த 17ஆம் திகதி கையளித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ஜயசேன, பிரதி அமைச்சர்கள் பண்டு பண்டாரநாயக்க, ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா, சுதர்ஷின் பெர்னாண்டோபுள்ளே மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# இராவணன் என்ற மன்னன் இலங்கையில் இருக்கவில்லை

## புராணக் கதை என்றார் எல்லாவல

(கொழும்பு)

இலங்கை இந்து நாடு என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து இனவாதத்தை தூண்டும் வகையில் வெளியிடப்பட்ட கருத்து என நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழ் இந்து நாடு என முதலில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே கூறினார். இதில் எந்த வரலாற்று ரீதியான சாட்சியங்களும் இல்லை. அத்துடன் அது யூகத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது.

நான் எழுதிய பௌத்த உறுமய நூலில் அதற்கான பதிலை வழங்கியுள்ளேன். இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றில் இலங்கையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவற்றில் இலங்கை எனக் குறிப்பிடப்படுவது இலங்கையல்ல. வேறு ஒரு தீவு பற்றியே அவற்றில் கூறப்பட்டுள்ளது. இதனை தவறாக புரிந்து கொணடவர்கள் இப்படியான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இராவணன் என்ற மன்னன் இலங்கையில் இருக்கவில்லை. இராவணன் என்ற மன்னர் இருந்தார் என்பதை உறுதிப்படுத்த எந்த வரலாற்று ரீதியான சான்றுகளும் கிடைக்கவில்லை. இதனால் இந்தக் கதை புராணக் கதை.

ஆரியர்கள் இந்தியாவில் இருந்து வந்தனர். அவர்கள் வடமேற்கு இந்தியாவில் இருந்து வந்தனரே அன்றி தென்னிந்தியாவில் இருந்து வரவில்லை. இந்தியாவின் தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது போல் வேறு பிரதேசங்களில் இருந்தே தமிழர்கள் தென்னிந்தியாவுக்கு வந்துள்ளனர்.

சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள், இலங்கையை ஆக்கிரமித்தனர் என்று வரலாற்றில் கூறபபட்ட போதும் அந்த சகல சந்தர்ப்பங்களிலும் அவரை தோற்கடித்து இலங்கையை ஐக்கியப்படுத்த இலங்கையில் ஆட்சி செய்த மன்னர்கள் நடவடிக்கை எடுத்தனர். பயங்கரவாத ஆக்கிரமிப்பை அவர்கள் விரட்டியடித்தனர்.

இலங்கைக்கு வந்த ஆரியர்களும், பிராமணர்களும் இலங்கையில் வழிபாடுகளில் ஈடுபட்ட போதும் அவர்கள் வழிப்பட்ட இடங்களை இந்து ஆலயங்கள் என்று கூறமுடியாது. விஜயன், பாண்டுகாபாயன், தேவநம்பிய தீசன் ஆகியோர் இந்து மதத்தை பின்பற்றினர் என்பதற்கான சான்றுகள் எங்கும் கிடைத்ததில்லை என்றார்.

### பொதுநலவாய மாநாட்டின் போது இஸ்ரேல் பிரதிநிதிகள் இலங்கையில்

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது இஸ்ரேல் பிரதிநிதிகள் இலங்கையில் தங்கியிருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

விசேட தனியார் விமானமொன்றில் குறித்த இஸ்ரேலிய முக்கிய பிரபுக்கள் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் நடைபெற்ற காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து தங்கியிருந்தனர் அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும்.

இதேபோன்று பிரித்தானியாவின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குறித்த காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர் என்றார்.

# வைத்தியசாலைகளில் பாரிய மருந்துத்தட்டுப்பாடு

## சுவசேவா சங்கம் குற்றச்சாட்டு

வைத்தியசாலைகள் பலவற்றில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு இருப்பதாக அகில இலங்கை 'சுவசேவா' சங்கத் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வைத்தியசாலைகள் பலவற்றில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் சுகாதார அதிகாரிகள் மில்லியன் கணக்கில் செலவு செய்து விழா நடத்துகின்றனர். கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற நியமனம் வழங்கும் நிகழ்விற்கு 20 மில்லியனுக்கும் அதிகமான நிதி செலவிடப்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு செலவிட வேண்டிய இந்தப் பணம் விழாக்களுக்கு செலவிடப்பட்டு வீணாவதால் வைத்தியத் துறையில் பாரிய சிக்கல் நிலை ஏற்படும் என்றார்.

# பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட தொண்டர்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

பணிப் புறக்கணிப்புப் போராடடத்தில் ஈடுபட்ட தொண்டர்களுடன் ஈபிடிபியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்களுடன் அவர்களுடைய கோரிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் கேட்டறிந்து கொண்டார். இதன்போது கருத்துத் தெரிவித்த தொண்டர்கள் தாம் மிக வறுமையின் மத்தியில் பல துன்ப துயரங்களை அனுபவித்தே பல வருடங்களாக இப் பணியினை ஆற்றி வருவதாகவும் தற்போது வழங்கப்படும் நியமனத்திற்குள் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆறு பாடம் சித்தியடையாதவர்களுக்கு நியமனம் வழங்கப்படமாட்டாது என்றதன் அடிப்படையில் எமது கடந்த கால அர்ப்பணிப்பான பணி புறந்தள்ளப்படுவதாகவும் தெரிவித்தனர். இத் தோடு எமக்கு நியாயபூர்வமான தீர்வினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கையுடனே நாம் உள்ளோம் எனவும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உங்களுடைய அர்ப்பணிப்புடனான பணி மற்றும் நீங்கள் பணியின் போது பட்ட துயரங்கள் என்பன வீணடிக்கப்படாமல் உரிய அமைச்சுக்களுடன் கலந்துரையாடப்பட்டு தகுந்த நடவடிக்கையினை அமைச்சர் டக்ளஸ தேவானந்தா ஊடாக பெறறுத் தருவோம் என்றும் தெரிவித்தார்.

அத்தோடு, மேற்படி தொண்டர்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசியூடாக கலந்துரையாடி அவர்களது கருத்துக்களை பெற்றுக் கொண்டதுடன் இருவாரத்திற்குள் மேற்படி பிரச்சினைக்குத் தீர்வினை எட்டக்கூடிய வகையில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். இக் கலந்துரையாடலின் போது யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி உட்பட துறை சார்ந்த பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## புதிய நிர்வாகத்தெரிவு

வரணியில் உள்ள 8 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி இந்து இளைஞர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்புதிய தலைவராக கே.ராஜமோகன், செயலாளராக சி.சிவச்சந்திரன், பொருளாளராக க.விஸ்ணுகரன், உபதலைவராக ந.நர்மதன், உபசெயலாளராக பாநிரோசன், ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (130)

# யுத்தத்தின் இழப்புக்கள் கிராமமட்டத்தில் பதிவுகள்

(சாவகச்சேரி)

யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் கிராமசேவை அலுவலர்கள் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கல்வயல் கிராம சேவை அலுவலர் பிரிவில் அண்மைக்காலமாக இவ்வாறான யுத்த காலத்தில் ஏற்பட்ட பொருட்சேதங்கள், இழப்புகள், வாகன, கட்டட இழப்புகள் தொடர்பில் மீளவும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிராம அலுவலர்கள் இவ்வாறு தத்தமது பிரிவுகளில் குடும்பங்கள் வாரியாக ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு முச்சக்கரவண்டி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

வீதியோரம் தரித்து நின்ற மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளிய முச்சக்கரவண்டி தப்பியோடிய சம்பவம் ஒன்று பஸ்தியன் சந்திக்கருகில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கடைஒன்றில் பொருட்களை வாங்கிக் கொண்டு வீதியில் ஏறுவதற்காக மோட்டார் சைக்கிளை நிறுத்திய வேளை மிக வேகமாக வந்த முச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளிவிட்டு அவ்விடத்தை விட்டு மறைந்துவிட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் சிறுகாயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்த நிலையில் இவ்விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ)

# எண் ஜோதிடப் படி 2014 உங்களுக்கு எப்படி?

பிறக்கின்ற புதிய ஆண்டின் (2014) 2+0+1+4=7) கூட்டு எண் 7 ஆகும். 7 எண் சர்ப்பக்கிரகமான கேது ஆகும். மனிதர்களையும் உலகையும் ஆழப்போகும் இந்த எண் சோதனைகளைத்தரினும் தெய்வநம்பிக்கை மூலம் வருகின்ற துயரங்களை வென்றெடுத்து அதிர்ஷ்டசாலிகளாக, முன்னேற்றப்பாதையில் தடம் பதித்து சாதனைகள் புரியலாம்.

உங்கள் பிறந்த திகதியுடன் 7 எண்ணைக் கூட்ட வரும் எண்ணே 2014ஆம் ஆண்டில் உங்[கள்] நன்மை தீமைகளைத் தரப்போகும் கிரக நாயகர்கள்.

பிறந்ததிகதிகள் 2014ஆம் ஆண்டின் நாயகர்கள்.

1-10-19-28- (1) +7=8-சனீஸ்வரன்
2-11-20-29- (2) +7=9-செவ்வாய்
3-12-21-30- (3) +7=1-சூரியன்
4-13-22-31- (4) +7=2-சந்திரன்
5-14-23- (5) +7=3-வியாழன்
6-15-24- (6) +7=4-இராகு
7-16-25- (7) +7=5-புதன்
8-17-26- (8) +7=6-வெள்ளி
9-18-27- (9) +7=7-கேது

உதாரணமாக 24.09.1985ஆம் ஆண்டில் பிறந்த ஒருவரின் பிறந்த திகதி எண் 24=2+4=6 ஆகும். 2014ஆம் ஆண்டின் எண் 2014=7ஆகும். பிறந்த எண்ணையும் (6) 2014 வருட எண்ணையும் (7) கூட்ட 6+7=13=4 எண் குறிப்பிடும் இராகுவே ஆட்ட நாயகனாக 2014ஆம் ஆண்டில் விளங்கிப்பலாபலன்களை 24ஆம் திகதி பிறந்தவருக்கு ஏற்படுத்துவார். இவ்வாறு உங்கள் பிறந்த திகதியுடன் 2014ஆம் ஆண்டின் எண் 7ஐக் கூட்டி வருகின்ற எண் குறிக்கும் கிரகமே உங்களுக்கு பலன் தரும் நாயகனாகும். 2014 ஒவ்வொரு பிறந்த திகதிக்குரிய நன்மை/தீதான பலன்களை அறிவதுடன் அதிர்ஷ்டசாலியாக வருவதற்கு மேற்கொள்ளும் கைங்கரியங்களையும் வாசித்தறிந்து கொள்ளுங்கள்.

## பிறந்த திகதிகள் 1-10-19-28

சூரிய ஆதிக்கராகிய உங்களை 2014ஆம் ஆண்டில் விதிநாதன் சனீஸ்வரனே (8)ஆம் எண் ஆதிக்கம் செலுத்தி தொட்ட தெல்லாம் துலங்கச் செய்வார். இதுவரை காலமும் இழுபட்டுக் கொண்டிருக்கும் வெளியூர் பயணம்/விவாகம் என்பன தடங்கல் இல்லாமல் வெற்றிக்கனியைத் தட்டித்தரும். புதிய மனை அமைக்கவும் வாகனயோகம் ஏற்படவும் வழிபிறக்கும். நோய்கள் குணமடைந்து புதிய தெம்பு தேக நிலையில் தக்க வைக்கும். பங்குத் தொழிலைக் கைவிட்டு தனித்தியங்கலாம். உத்தியோக மதிப்புக்கு ஆளாகுவீர். பிரிந்திருந்த உறவுகள் கைகொடுக்கும். கௌரவ பதவிகள் கிட்டும். இடைத்தங்கல் நாடுகளில் உறைவோர் விரும்பிய தேசம் சென்றடைவர். வியாபாரம் செழித்து இலாபநோக்கில் செல்லத் தொடங்கும். காதலில் ஏற்பட்ட சோதனைகள் மறையும். இடைக்கிடையே துன்பநிகழ்வுகள் ஏற்படினும் இறுதியில் உங்கள் பக்கமே அதிஷ்ட அலைவீசும். குழந்தைப்பாக்கியம் உண்டு. அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்கள் மூலம் பணம் கிட்டும்.

தலைமையையும் அதிர்ஷ்டகரமான வாழ்வையும் அடைவதற்கு உங்கள் பெயரினை/கையெழுத்தினை 1ஆம் எண்ணிலேயே அமையுங்கள். கூட்டெண் 8 வரின் 5 எண்ணே மிகச் சிறந்தது. உடைகளைத் தரிக்கும்போது மஞ்சள்/இளஞ்சிவப்பு நிறங்களையே தெரிவு செய்யுங்கள். ஆபரணங்களில் பதிக்க அதிர்ஷ்டக்கல் மாணிக்கமேயாகும். மஞ்சள் புஷ்பராகமும் உகந்ததாகும். முக்கிய சுப தினங்களாக 1,10,19,5,14,23 ஆகிய திகதிகளில் நீடித்த நன்மை தர கருமங்களைத் தொடங்கலாம். பெண் தெய்வ வழிபாட்டின் மூலம் தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா
வி.ஏ.சிவராசா

# முரசின் இன்றைய பலன்



(20.12.2013 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 05 ஆம் திகதி.
புனர்பூச நட்சத்திரம் காலை 06.29 வரை.
பின் பூசம். சித்தம்/திருதியை.
இராகுகாலம 10.54 - 12.24 வரை. சுபநேரம 06.24 - 07.54 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** வாக்குச் சாதுரியத்தினால் திட்டமிட்டபணிகள் தாமதமின்றி நிறைவேறல், காரியஞ் சாதிக்க உங்களைப் பற்றி புகழுரையாளர்களின் வார்த்தைகளில் மயங்கிவிடாதீர்.

**ரிஷபம்** குடும்பத்தில் ஏற்பட்ட சலசலப்பு அனுசரித்துப் போவதினால் நீங்கிவிடல், கடனுக்குப்பெற்ற பணத்தை ஆடம்பரப் பொருட்கள் வாங்க முஸ்தீபு.

**மிதுனம்** வேலைப்பளுவின் சோர்வு நீங்க குடும்பத்துடன் சிறுசுற்றுலா சென்று வரல், பிறரைப்பற்றிய விமர்சனங்களைத் தவிர்ப்பது நன்றாகும்.

**கடகம்** மறதியால் அவதிப் படல், இன் முகத்துடன் செயலாற்றுவதினால் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு மேலோங்கல்.

**சிம்மம்** தம்பதியருக்கிடையே நிலவிய மனக்கசப்பு அகன்று சுமுகநிலை ஏற்படல், மக்களின் உயர்வு கேட்டு அளவிலா உவகை கொள்ளல்.

**கன்னி** எதிர்ப்புக்கள் நீங்கியமையினால் மனதில் உற்சாகம் பிறத்தல், பகைமை உணர்வு புரிந்துணர்வினால் நீங்கிவிடல்.

**துலாம்** சக ஊழியர்கள் ஒத்துழைத்ததால் வியாபாரம் பளைகட்டல், நீண்டநாள் சிக்கலில் இருந்த நிலுவைப் பணம் வந்து சேர்தல், அமெரிக்கலொத்தர் விஸா கிட்டலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தில் கலகலப்பு நிலைதோன்றி மகிழ்ச்சிதக்கவைத்தல், எதிர்காலத்தை மனதிற்கொண்டு முக்கிய தீர்மானம் எடுத்தல்.

**தனுசு** தேடிவந்த வாய்ப்பினைப் பயன்படுத்தியதால் முன்னேற்றம், மற்றவர்களுக்காக பரிந்துபேசியதால் சிக்கல் ஏற்படல்.

**மகரம்** மதியாதார் முற்றம் மிதிக்க மனமின்றி சஞ்சலத்தில் ஆழ்தல், ஏலத்தில் விலைப்படப்போகும் தங்க நகைகளை மீட்க பணத்திற்கு நண்பரை நாடுதல்.

**கும்பம்** திறமையை வெளிப்படுத்த நாடிவரும் சந்தர்ப்பத்தைக் கைவிட்டு விடாதீர்கள், கொடுத்த வாக்கை நிறைவேற்ற பாடுபடல், எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சாமை.

**மீனம்** குடிபோதையினால் மனைக்கு வருகைதரும் பிதாவினால் கலக்கமடைதல், ஒப்பந்த வேலை இலாபத்தைத் தந்ததால் தொழிலில் ஊக்கம் பிறத்தல்.

# மீண்டது மேற்கிந்தியத்தீவுகள்



(ஹமில்டன்)

ராம்டின், சந்தர்போல் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது. நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் நியூசிலாந்தின் ஹமில்டனில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடியது. இருப்பினும் 41 ஓட்டங்களைப் பெற்றவேளை முதல் விக்கெட் சாய்க்கப்பட தொடர்ந்து மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் மளமளவென விக்கெட்டுக்களைத் தாரைவார்த்து அரங்கு திரும்பினர். ஒரு கட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த ராம்டின், சந்திரபோல் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டது. இந்து ஜோடியைப் பிரிக்க நியூசிலாந்து கப்டன் மக்கலம் பல வழிகளிலும் முயன்றபோதும் பெரும் சிரமமாக அமைந்தது. சிறப்பாக ஆடிய ராம்டின் சதமடித்து அசத்தினார். இந்நிலையில் இந்த ஜோடி 213 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ராம்டின் 148 பந்துகளை எதிர்கொண்டு 18 பவுண்டரிகள் அடங்கலாக 107, பவள் 26, பரத்வைற் 45 ஓட்டங்களைப் பெற்றனர். சந்திரபோல் 168 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 97 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார். பந்து வீச்சில் சி. அண்டர்சன் மூன்று, ரிம் சௌத்தி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# விருது வழங்கி கௌரவிப்பு



(லண்டன்)

ரென்னிஸ் விளையாட்டில் இந்தாண்டுக்கான சிறந்த வீரராக ஜோகோவிச், சிறந்த வீராங்கனையாக செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு ஐ.டி.எப். விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். சர்வதே ரென்னிஸ் கூட்டமைப்பு (ஐடிஎப்) சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, இந்தாண்டுக்கான விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் லண்டனில் நடந்தது. இதில், 2013ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் விருது பெற்றார்.

இவர் தொடர்ந்து 3ஆவது முறையாக இந்த விருதைப் பெறுகிறார். இந்தாண்டு நடந்த அவுஸ்ரேலியன் ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச், விம்பிள்டன், யு.எஸ். ஓப்பனில் 2ஆம் இடத்தைப் பிடித்தார். ஏடிபி அந்தஸ்துப் பெற்ற போட்டிகளில் 7 சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிக் உலக தர வரிசையில் 2ஆம் இடத்தில் உள்ளார். சிறந்த வீராங்கனைக்கான விருது அமெரிக்காவின் செரீனா வில்லியம்சுக்கு வழங்கப்பட்டது. இந்தாண்டு பிரெஞ்ச் ஓபன், யுஎஸ் ஓபனில் சம்பியன் பட்டம் வென்ற செரீனா உலக தர வரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். இரட்டையர் பிரிவில் அமெரிக்க இரட்டையர்கள் பொப், மைக் பிரையன் சகோதரர்கள் விருது பெற்றனர்.

# இறுதிக்குள் பேயர்ன் முனிக்



(அகாதிர்)

பிபா கிளப் அணிகளுக்கான உலகக் கோப்பைக் கால்பந்துத் தொடர் இறுதிப் போட்டிக்கு பேயர்ன் முனிக் அணி முன்னேறியது.

கால்பந்து கூட்டமைப்பு சார்பில் (பிபா) கிளப் அணிகளுக்கு இடையே உலகக் கோப்பைத் தொடர் மொராகோவில் நடைபெற்று வருகின்றது. அகாதிரியில் நடைபெற்ற இதன் அரையிறுதியில் பேயர்ன் முனிக், குவாங்சு எவர்கிராண்ட் அணிகள் மோதின. முதல் பாதியின் 40ஆவது நிமிடத்தில் முனிக் அணியின் பிராங்க் ஒரு கோல் அடித்தார்.தொடர்ந்து அசத்திய இந்தஅணிக்கு மரியோ (44ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். இதற்குஎதிரணியால் பதிலடி எதுவும் கொடுக்க முடியவில்லை. விறுவிறுப்பான இரண்டாவது பாதியிலும் தனது ஆதிக்கத்தை தொடர்ந்த காட்ஜி (47ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து வலுப்படுத்தினார். போராடிய எவர்கிராண்ட் அணியால் கடைசி வரை ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.முடிவில், பேயர்ன்முனிக் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதிக்குள் நுழைந்தது.

# போராடித் தோற்றது



(சார்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி போராடித் தோல்வியைத் தழுவியுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் சார்ஜாவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 122, சொஹிப் மசூத் 71, சர்ஜீல் கான் 61 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லக்மல் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 323 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜனித் பெரேரா 64, சண்டிமால் 46, பிரசன்ன 42, சேனநாயக்க 42, டில்சான் 30, சங்கக்கார 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான் மூன்று, அப்ரிடி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக முகமட் ஹபீஸ் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று டுபாயில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பயிற்சியாளர்

சர்வதேச ரென்னிஸ் தரவரிஸ்சயில் 2ஆவது இடத்தில் உள்ள சேர்பியாவின் ஜோகோவிச், ஜேர்மனியைச் சேர்ந்த போரிஸ் பெக்கரை தன் புதிய பயிற்சியாளராக நியமித்துள்ளார். முன்னாள் வீரரான பெக்கர்,. 6 கிராண்ட்ஸ்லாம் மற்றும் 64 ஏ.டி.பி. ப்ட்டங்களை வென்றுள்ளார். தன் 17ஆவது வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்தார். ஜனவரியில் ஆரம்பமாகவுள்ள அவுஸ்ரேலிய ஓப்பன் தொடருக்கு தயாராகும் விதமாக ஜோகோவிச், தன் பயிற்சியாளரை மாற்றியுள்ளார். இருப்பினும் தன் நீண்டநாள் பயிற்சியாளரான மரியான் வஜ்டாவும் பயிற்சியாளர் குழுவில் இடம்பெறுவார் என ஜோகோவிச் தெரிவித்தார். பெக்கருடன் இணைந்து செயல்பட எனக்கு அருமையான வாய்ப்பு கிடைத்துள்ளது. அவரது அனுபவம் இன்னும் பல கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெல்ல உதவும் என, ஜோகோவிச் தெரிவித்தார்.

# இந்தியா முதல் இனிங்ஸ் 280


(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 280 ஓட்டங்களுக்குள் சுருண்டுள்ளது.

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி ஆரம்பம் முதலே ஒரு முனையில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஹோலி ஒரு முனையில் 'நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இந்திய அணி மீண்டும் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இந்திய அணியின் இறுதி ஐந்து விக்கெட்டுக்களும் 25 ஓட்டங்களுக்குள் சாய்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிறைவில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோலி 181 பந்துகளை எதிர்கொண்டு 18 பவுண்டரிகள் அடங்கலாக 119 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் ஹோலி பெற்றுக்கொண்ட ஐந்தாவதுசதமாக இது பதிவானது. அத்துடன் தென்னாபிரிக்க மண்ணில் சதம் பெற்ற எட்டாவது இந்திய வீரர் என்ற சிறப்பைப் பெற்றதுடன் ஜோகனஸ்பேர்க் மைதானத்தில் சச்சின், ராவிட்டிற்குப் பின்னர் சதமடித்த வீரர் என்ற சிறப்பையும் பெற்றார். மற்றும் ரகானே 47, புஜாரா 23, டோனி 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிளண்டர் நான்கு, மோர்கல் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மதிய போசன இடைவேளைக்காக நிறுத்தப்பட்டவேளை, விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.





# நான்காவது இடத்தில் அடித்த முதல் சதம்

(ஜோகனஸ்பேர்க்)

நான்காவது வரிசையில் ஆடிய முதல் ஆட்டத்திலேயே சதம் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என இந்திய அணி வீரர் ஹோலி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டத்தில் சதம் அடித்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான்காவது வீரர் வரிசையில் விளையாடுவதற்காக நான் காத்திருந்தேன். நீண்ட காலம் காத்திருந்த பின்னர் இந்த வரிசையில் ஆட வாய்ப்பு கிடைத்தது. நான்காவது வீரர் வரிசையில் ஆடிய முதல் ஆட்டத்திலேயே சதம் அடித்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாட முடியாதது வருத்தம் அளித்தது. அதை ஈடுகட்டும் வகையில் டெஸ்டில் நன்றாக விளையாட வேண்டும் என்று தீர்மானித்திருந்தேன். அடிலெய்ட்டில் நான் அடித்த சதமும், தற்போது அடித்த சதமும் ஒரே மாதிரியானது எனத் தெரிவித்தார்.

# டையமன்ஸ் நூற்றாண்டு கால்பந்து இன்று மூன்றாமிடத்திற்கான ஆட்டம்


இளவாலை யங்ஹென்றிஸ்


நாச்சிக்குடா சென். மேரிஸ்

(நெல்லியடி)

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழ கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வந்த கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி இன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் கின் அனுசரணையுடன் டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண கால் பந்து அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்தாட்ட போட்டித்தொடரை நடாத் தியது.

இதில் இறுதி மற்றும் மூன்றாமிடத் திற்கான போட்டிகள் சீரற்ற கால நிலை காரணமாக நடாத்த முடியாமல் பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில் மூன்றாமிடத்திற்கான போட்டி இன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில்நடை பெறவுள்ளது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி மோத வுள்ளது. வடமாகாணத்தில் இரு அணி களும் பிரபல்யம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி இறுதி வரை பர பரப்பு மிக்கதாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இதேவேளை, இப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணியும் தகுதி பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. இப்போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள் ளனர்.

(12)

# விபரம் கோருகிறது வலிகாமம் லீக்

(தெல்லிப்பளை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்குட் பட்ட அணிகளை ஒன்றிணைத்து லீக் அணி ஒன்றை உருவாக்கும் முனைப் புடன் வலிகாமம் கால்பந்தாட்ட லீக் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றது.

இதன் முதற் கட்டமாக வலிகா-மம் லீக்கில் அங்கத்துவம் பெற்றுள்ள ஒவ்வொரு அணிகளிலிருந்தும் ஐந்து வீரர்களின் விபரத்தை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து வலிகாமம் கால்பந் தாட்ட லீக் தலைவர் நவரத்தினராசாவிடம் தொடர்பு கொண்டு கருத்துக்கேட்டபோது: எமது லீக்கில் 35இற்கும் மேற்பட்ட அணிகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதில் ஒவ்வொரு அணிகளிடமிருந்தும் குறைந்தது ஐந்து சிறந்த வீரர்களின் பெயர் விபரத்தை எமக்கு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளோம். இவர் களுக்கான தொடர் பயிற்சிகளை வழங்கி அதிலிருந்து வலுவானதொரு அணியை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

எனவே, அந்த அடிப்படையிலேயே இந்த நடவடிக்கையை நாங்கள் மேற் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, நீண்ட போராட்டத்திற்கு மத்தியில் வலிகாமம் லீக் கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (93)




# தலைவர் வெற்றிக் கிண்ண காஸ்பந்து பதிவுகளை விரைவுபடுத்துங்கள்

## கோருகிறது வலிகாமம் கால்பந்து லீக்

வலிகாமம் கால்பந்தாடட லீக்கினால் முதல் தடவையாக இலங்கை உதைபந்தாட்ட தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்கான 11 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்ட போட்டியை நடாத்து வதற்காக வலிகாமம் கால்பந்தாட்ட லீக்குக்கு உட்பட்டகழகங் களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன . எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர் 0776589699 அல்லது செயலாளர் 0774335928 என்ற தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை விரை வாக மேற்கொள்ளுமாறு வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அறி வித்துள்ளது. (93)

# ஆலடி சிந்து அரையிறுதிக்கு முன்னேற்றம்

## இன்றைய காலிறுதியில் காளியம்பாள், உதயசூரியன் பலப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட் டத்திற்கு ஆலடி சிந்து அணி முன்னேறி யுள்ளது. முக்கியமான காலிறுதிப் போட்டி ஒன்றில் இன்றைய தினம் தாவடி காளியம் பாள், சண்டிலிப்பாய் உதயசூரியன் அணிகள் மோதவுள்ளன.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனு சரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி அணி களுக்கிடையில் வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டித் தொடரின் இரண்டாவது காலிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் ஆலடி சிந்து அணியும், உடுவில் வைகறை அணியும் மோதின.

இப்போட்டியில் முதல் அரைப் பாதியின் போது 2:1 என்னும் புள்ளிகளின் அடிப்படை யில் ஆலடி சிந்து முன்னணி வகித்தது.

இரண்டாவது அரைப்பாதியினையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆலடி சிந்து மேலும் 6 புள்ளிகளைப் பெற்ற போதும் உடு வில் வைகறையால் 3 புள்ளிகளையே பெற முடிந்தது.

இறுதியில் 8:4 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் ஆலடி சிந்து வெற்றி பெற்று இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றது. ஏற்கனவே நடைபெற்ற முத லாவது காலிறுதிப் போட்டியில் மயிலிட்டி வள்ளுவர் அணி அளவெட்டி பாரதி அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடை பெற்ற லீக் போட்டியொன்றில் தாவடி காளி யம்பாள் அணியும் மயிலிட்டி பாரதி அணி யும் மோதின. இரு அணிகளும் மாறி மாறி பழங்களைப் பெற்றன. முதல் அரைப்பாதியின் போது 3:3 என்னும் பழங்கள் அடிப்படையில் இரு அணிகளும் சமநிலையிலிருந்தன.

பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பமான போது தன்னை சுதாகரித்து ஆடிய தாவடி காளியம் பாள் வீரர்கள் இரண்டாவது அரைப்பாதியின் போது மேலும் 10 பழங்களைப் பெற்றபோதி லும் பதிலுக்கு எந்த பழங்களையும் பாரதி அணி பெற முடியாது போனமையால் 13:3 என்னும் பழங்கள் அடிப்படையில் தாவடி காளியம்பாள் அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் தாவடி காளியம்பாள் அணி காலிறுதிப் போட் டிக்குத் தகுதி பெற்றது. இன்றைய தினம் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் சண் டிலிப்பாய் உதயசூரி யன் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (48, 93)

# பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்து கடுகதியில் ஏற்பாடுகள் முன்னெடுப்பு

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் விரைவில் நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் வைத்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி 11,13,15,17 வயதுப் பிரிவு அணிகளுக்கான போட்டிகள் ஆண், பெண் என இரு பாலாரிற்குமிடையில் நடைபெறவுள்ளது.

ஜனவரி முதல் வாரப் பகுதியில் விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் போட்டிகள் ஜனவரி இறுதிக்குள் நடாத்தி முடிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் ரமணன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கூடைப்பந்தாட்டத்தினை வளர்க்கும் நோக்கிலும், அவர்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்கும் முகமாகவே இப்போட்டிகள் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளன.

அத்துடன் சமகாலத்திலேயே யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 14 அணிகளும், பெண்கள் பிரிவில் 10 அணி களும் கலந்து கொண்டு மோதவுள்ளன. இச்சுற்றுப்போட்டிகள் இனி வரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

# விருது வென்றார் கபில்தேவ்

(சென்னை)

இந்திய கிரிக்கெட் சபை சார்பில் வழங்கப்படும் சி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு முன்னாள் கப்டன் கபில்தேவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் சபை (பிசிசிஐ) சார்பில் கடந்த 1994ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் சி.கே. நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டுக்கான இவ்விருதுக்கான வீரரை தேர்வு செய்வதற்கான பி.சி.சி.ஐ. விருதுக்குழுக் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. குழுவின் தலைவர் சீனிவாசன், செயலாளர் சஞ்சய் பட்டேல், மூத்த பத்திரிகையாளர் அயாஸ் மேமோம் ஆகியோர் ஆலோசனை நடத்தி, இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவை தேர்வு செய்தனர்.

டெஸ்ட் வரலாற்றில் 5,000 ஓட்டங்கள் மற்றும் 400 விக்கெட் குவித்த முதல் வீரர் கபில்தேவ்தான். இவரது தலைமையின் கீழ் இந்திய அணி மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளது. இதில் குறிப்பாக, 1983ஆம் ஆண்டு உலகக்கோப்பையை இந்தியாவென்றது. 1978ஆம் ஆண்டு இந்திய அணியில் இடம்பிடித்த கபில்தேவ் 1994 ஆம் ஆண்டுவரை விளையாடியுள்ளார். இதில், 131 டெஸ்டில் விளையாடி 434 விக்கெட் மற்றும் 5,248 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். 225 ஒருநாள் போட்டியில் விளையாடியுள்ள அவர் 253 விக்கெட் மற்றும் 3,783 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இவருக்கு சி.கே.நாயுடு விருதுடன், கோப்பை, சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை 25 இலட்சம் வழங்கப்பட உள்ளது. விருது விழா நடக்கும் இடம், திகதி குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

# ஆளுநர் - முதலமைச்சர் அதிகார இழுபறி

- மாமல்லன் கட்டுரையிலிருந்து.

நீதிபதியாக இருந்தபோது சரியாக இருந்த எல்லாமும் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் தவறாகத் தெரிகின்றது. 1990 ஆம் ஆண்டிலிருந்து வலி வடக்கு பாதுகாப்பு வலயங்கள் இருந்தன. அப்போது கொழும்பில் நீதிபதியாக இருந்த தற்போதைய வடக்கின் முதலமைச்சர் கம்பன் விழாக்களில் சமய உரையாற்றிக் கொண்டு இருந்தார்.

ஏ-9 வீதி இராணுவத்தாலும், புலிகளாலும் தடுக்கப்பட்ட போக்கு வரத்து அனுமதிகள் வழங்கப்பட்டதும், புலிகள் ஒருபடி மேலேபோய் நுழைவுக் கட்டணங்களையும், தீர்வைகளையும் வாங்கினார்கள் இந்த துன்பத்தை அனுபவித்த பிறகும் மக்கள் நிம்மதியாக பயணிக்கவில்லை.

ஆணும் பெண்ணும் பால் வேறுபாடு இல்லாமல் தலையிலிருந்து கால்வரை தடவிப் பரிசோதிக்கப்பட்டார்கள். புலிகள் குடும்பத்தில் ஒருவரை பணயம் வைக்காமல் வன்னியிலிருந்து யாரையும் வெளியில் செல்லவே அனுமதிக்கவில்லை.

அந்தப் பொழுதில் நமது முதலமைச்சர் இலங்கையின் வட மாகாணம் ஆபிரிக்க கண்டத்திலையோ, அத்லாண்டிக் கண்டத்திலேயோ இருப்பதாக நினைத்துக் கொண்டு இருந்திருப்பார். அன்று அவர் நான் நீதிபதி என்று கூறிக் கொண்டு ஏ ஒன்பது வீதியில் பயணிக்க துணிந்திருந்தால் புலிகள் வண்டவாளத்தை தண்டவாளம் ஏற்றியிருப்பார்கள்.

கூடவே புலிகளுக்கு எதிராக இவர் வழங்கிய தீர்ப்புக்களுக்கான குற்றத்திற்கு புலிகளின் நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு வழங்கியிருப்பார்கள் என்பதை தெரிந்து கொண்டிருப்பார்.

முதலமைச்சருக்கு முடி சூட்டிய சம்பந்தரே பாதையால் யாழ்ப்பாணம் போக ஆசையாக இருக்கின்றது என்று புலிகளிடம் கேட்கக்கூட நினைத்திருக்கமாட்டார். அப்படி ஒருவார்த்தை கேட்டிருந்தால் சாதாரண சம்பந்தன் மாமனிதராகி இருப்பார். புலிகளுடனான அனுபவத்தை ஐயா வேறு யாரையும் விடவும் அவர் அரசியல் குருவாக மதிக்கும் சம்பந்தரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

சம்பந்தரின் அரசியல் வீாழ்க்கையிலேயே மிகவும் கேவலமான கெடுகாலம் என்றால் அது தமிழ்ச் செல்வனுக்கு சலாம் செய்ததும், பாலசிங்கத்தின் நையாண்டிகளுக்கு உள்ளுக்குள்ளாகவே கொதித்துக் கொண்டு முகத்தில் பொய்ச் சிரிப்பைக் காட்டியதையும், பிரபாகரனை சந்திக்கும் பொழுதுகளில் திருமலை காளியம்மனை விழுந்து கும்பிட்டு அம்மாளாச்சி வன்னிக்குப் போவது போலவே ஒரு குறையும் இல்லாமல் திரும்பி வரும்வரை காவலாக இருக்கவேணும் என்று நேர்த்திக் கடன் வைத்துக் கொண்டு போய் வந்ததையும், அதனாலான இரத்த அழுத்தத்தையும், மன அழுத்தத்தையும் குறைத்துக் கொள்வதற்காக தமிழ் நாட்டிலுள்ள குடும்பத்திடம் போய் நான் இயமனைப் பார்த்து விட்டு வந்திருக்கிறேன் என்று குடும்பத்தின் பதற்றத்தைத் தணித்த கதையையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.



சும்மா வீட்டுக்கு வரும்போது கேட்டால் பொய்தான் அதாவது வடிவேலு சரளாவிடம் அடிவாங்கிவிட்டு வெளியில் வரும்போது எதுவும் நடக்காத மாதிரியே மீசையை முறுக்கிக் கொண்டு "உதைக்காட்டி திருந்த மாட்டாளுகள் போல" என்று கூறுவதுபோல் சம்பந்தர் அங்கு நடந்ததற்கு எதிர்மாறாக கதையளப்பார். கொஞ்சம் கருக்கலில அழைத்து சோம பானம் பரிமாறி அவருடைய வீரப்பிரதாபங்களை எடுத்துவிட்டு கொஞ்சம் வண்டி செகன்ட் கியரில போகும்போது "பிரபாகரனை எப்புடி ஹாண்டில் பண்ணுனீங்கள் அதுக்கு உங்களுக்கு ஒரு சபாஸ் போடலாம்" எண்டு மெதுவாக "போலை" போட்டால் போதும்.

பிறகு அரசியல் குரு "தான் புலிக்கு ரிங் மாஸ்ட்டராக இருந்ததையும், தான் நடத்திய சர்க்கஸ் கம்பனி அனுபவங்களையும் தனக்கே உரிய உறுமலோடும், உருட்டலோடும் சொல்லுவார். அந்த மாதிரி நேரத்தில அவரின்ர கதையைக் கேட்பதே சுவாரஸ்யமாக இருக்கும்.

அதை விட்டுப்போட்டு மைக் கிடைத்தால், "ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்கிறார், பிரதம செயலாளர் என்னை மதிக்காமல் இருக்கின்றார், அதிகாரிகள் என்னைப் பார்த்து ஒரு குட்மோனிங்கூட சொல்லினமில்லை, மாகாண சபையை ஒழுங்காக நடத்த விடுகினமில்லை" என்று புலம்பித் தள்ளுகின்றார்.

முதலமைச்சரை அழைத்தால் அவர் ஆளுநரைப்பற்றி புலம்புவார். பிறகு ஆளுநரை ஒரு தேவைக்கு அழைக்கப் போனால் அவர் முகத்தை சுளிப்பார். இதென்னடா வம்பா போச்சுது என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தலையைச் சொறிந்து கொண்டிருக்கின்றார்கள்.

சட்ட திட்டங்கள் தெரிந்தவர், நாட்டு நடப்பு தெரிந்தவர் என்று நம்பப்படுகின்றவர் பாதுகாப்பு வலயத்துக்குள் போவதற்கு முன்னர் என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று தெரிந்திருக்கவில்லை. அவரது செயலாளர்களுக்கும் ஒரு விளக்கெண்ணையும் தெரியவில்லை.

முன்னறிவிப்பு இல்லாமல் போவதை துணிச்சல் என்று நினைத்த முதலமைச்சர் உள்ளே போகமுடியாது என்று தடுத்தபோது காரைவிட்டு இறங்கி அந்த இடத்திலேயே அமர்ந்து உள்ளே விடாவிட்டால் அந்த இடத்தைவிட்டு நக[illegible] போவதில்லை என்று உரிமைக் குரல் கொடுத்திருந்தால் தமிழ் மக்கள் புல்லரித்துப் போயிருப்பார்கள். அதையும் செய்யவில்லை.

அரசியலில் காலடி எடுத்து வைத்தபோது, நீதிபதி ஐயா ஒரிஜினல் கூட்டமைப்பு அரசியல்வாதியாக கொஞ்சம் காலம் எடுக்கும் என்று எதிர்பார்த்தவர்களை, இவ்வளவு விரைவாக ஏமாற்றுவார் என்று யாரும் நினைக்கவே இல்லை.

# ராஜா ராஜாதான்....

- மகேஷ் சுப்ரமணியன் -

ராஜாவிடம் எனக்குப் பிடித்ததும்-வியப்பதும், வேறு யாரிடமும் அதிகம் உணராதது அவரின் இடையிசை(Interlude) திறமை. பாடல் ட்யூன் போடுவது பெரிய காரியமல்ல அந்த பாடலுக்கேற்ப இடையிசை அமைப்பது மிகப்பெரிய சவால்.

S.A.Rajkumar நன்றாக ட்யூன் போடுவார் ஆனால் பரிதாபமான இடையிசைனால் - ஒரே மாதிரியான ல லா கோரஸ், ஒரே வகையான வாத்திய அமைப்புகள் ஆகியவற்றால் பாடல் சவலைக் குழந்தையாய் காட்சியளிக்கும்.

ஹிந்தியிலும் நதீம்-ஷரவன் என்ற இசையமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இதே போலத்தான். விளைவு, பாடல்களை சரணத்திலிருந்து கேட்டால் எந்தப் பாடலின் சரணம் என்றே குழப்பமாக இருக்கும். ராஜ்குமாரின் பாடல்களுக்கு, ஒரு வேளை ராஜா Orchestration அமைத்திருந்தால் அவரின் பல பாடல்கள் தப்பித்திருக்கக்கூடும்.

Hum Aapke Hain Koun படப் பாடல்களும் மிக நல்ல உதாரணம் - நல்ல பாடல்கள் சுமாரான இடையிசையால் amateurish -ஆக நம் காதுகளுக்கு ஒலிக்கிறது.

ஆனால், ராஜாவின் இடையிசை ஒரு இராணுவ அணிவகுப்பு போல் கன கச்சிதமாக, அரைத்த மாவையே அரைக்காமல் ஒவ்வொரு சரணத்திற்கும் வேறுபடுவது; (இதையே 900 படங்களில் தொடர்வது யாராலும் நினைக்க முடியாத காரியம்)

பல வாத்தியங்கள் ஒவ்வொன்றாக Layer மேல் Layer-ஆகச் சேர்ந்து கலந்து Harmony-யாகி ஒரு அலாதியான இன்பத்தை, பிரமிப்பைத் தருவது.

இதற்கு நல்ல உதாரணம் : வளையோசை பாடலின் (சத்யா) முதல் சரணத்தில் ஒரு பட்டாம்பூச்சி பறப்பதை இசையில் கொண்டு வந்து அது ஒலித்துக் கொண்டிருக்கும்போதே பின் Keyboard/Synth சேர்ந்து கொள்வது - Counterpoint!!

அல்லது Interlude, தனித் தனி குழுக்களாக இடைவெளி விட்டு இயங்குவது - இதற்கு மிகச் சிறந்த உதாரணம் : வான் மேகம் பூ பூ வாய் தூவும் பாடலின் இடையில் Synth/Elec Guitar ஒலித்து சட்டென நின்று ஒரு மிரட்டலான Orchestration-இற்கு வழி விடுவது பின் திரும்பவும் Synthஇற்கு வருவது அப்புறம் Orchestration-லேயே ஒரு மெல்லிய மாற்றம் என மூணு நிமிட பாடலில் எத்தனை வாத்திய மாற்றங்கள்!!



ராஜாவிடம் பிடித்த இன்னொன்று கச்சா முச்சாவென்று Arrangement/ Orchestration போடாமல் அந்தப் பாடலுக்கு எது தேவையோ அதைப் பயன்படுத்துவது.

என்னுள்ளே என்னுள்ளே பாடல், தமிழில் காமத்தை கண்ணியமாக அணுகிய ஒரு சில பாடல்களில் ஒன்று.

மிக அந்தரங்கமான இந்தப் பாடலில் ராஜா என்ன அருமையாக இடையிசையை அடக்கி வாசித்திருக்கிறார்.

'பாடலின் தன்மையை, Mood-ஐ சிறிதும் சிதைக்காமல் இடையிசை இருப்பது; அந்த ஆரம்ப கி[illegible] இசை, மிதமான கோரஸ், பி[illegible] முதல் சரணத்தில் ஒரு நீரூற்றைப் போல எழும் அந்த Baroque Style Orchestration, பின் இரண்டாவது சரணத்தில் Icing on the Cake-ஆக வரும் வாலியின் வரிகள் : மனிதர் எப்படி அனுபவித்து எழுதியிருக்கிறார்!!!


அதிலும் அந்த கடைசி மூன்று வரிகள் puts in Ecstasy, literally!!!

'கூடு விட்டு கூடு ஜீவன் பாயும் போது
ஒன்றி ஒன்றாய் கலந்தாட
ஊண் கலந்து ஊனும்
ஒன்று பட தியானம்
ஆழ்நிலையில் அரங்கேற
காலம் என்ற தேரே ஆடிடாமல் நில்லு
இக்கணத்தைப் போலே இன்பம் எது
சொல்லு
காண்பவை யாவும் சொர்க்கமே தான்.'


பொப் இசை உலகில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் மைக்கேல் ஜாக்சன். அவர் மறைந்துவிட்டாலும் அவரின் பாடல்களுக்கு இன்னும் வரவேற்பு இருந்து கொண்டுதான் உள்ளது.

அவர் மேடையில் தோன்றும்போது கண்ணைக் கவரும் பளபளப்பான ஆடைகளை அணிந்து கொண்டு வருவார். அவர் முதன்முதலாக மேடையில் தோன்றிய 1983-ஆம் ஆண்டில் தன்னுடைய அம்மா பயன்படுத்திய சிறிய மேலாடையை அணிந்திருந்தார்.

அந்த உடை மிகவும் அதிர்'டம் நிறைந்தது என்று அவர் நம்பியதால் வீட்டில் அலுமாரியில் வைத்திருந்த அன்னையின் ஆடையைத் திருடிச் சென்று அணிந்தார். அவரின் நம்பிக்கை வீண் போகவில்லை. அவருடைய அம்மாவின் அந்த ஆடைதான் அவரை உலகம் புகழும் பொப் இசைப் பாடகராக மாற்றியது என்று அவர் சொல்லிவந்தார்.



## அதிர்ஷ்டம்!



# ஜூபிடரின் நிலவு – இயோ!

ஜூபிடரின் நிலவான இயோ, ஜூபிடரின் பத்தாவது சுற்றுவட்டப்பாதையில் உள்ளது என்று நாசாவின் கலிலியோ விண்வெளிக்கலம் தெரிவித்துள்ளது. பூமியின் நிலவை விட சற்று பெரியதாக உள்ளது இந்த இயோ. சூரிய மண்டலத்திலுள்ள அதிக எரிமலை வெப்பத்தில் செயல்படும் உடல் அமைப்பை பெற்றுள்ளது என்று தெரிவிக்கின்றனர். இதில், மஞ்சள் மற்றும் கபில வண்ணங்கள் தோன்றும் அதேபோல் வெள்ளை மற்றும் சாம்பல் வண்ணங்களில் சல்பர் டை ஒக்சைட் உறைபனி போல தோன்றும்.

சுற்றியுள்ள வளையம் பிரகாசமான சிவப்பு நிறத்திலும், மற்றும் குறைந்த பிரகாசம் கொண்ட மார்க் பகுதிகளில் "கறுப்பு" புள்ளிகளும் அதிக வெப்பம் மற்றும் மேற்பரப்பு மாற்றங்கள் கொண்டதாகவும் இருக்கிறது. ஒரு புதிய கரும்புள்ளி (மேல் வலது ஓரத்தில்) தோன்றி உள்ளது, ஒரு எரிமலை மையத்தில் சுற்றி வளர்ந்துள்ள விட்டம் 400 கிலோமீற்றர் (250 மைல்கள்) இதற்கு Pillan Patera என்று பெயரிட்டுள்ளனர்.

5 மாதங்களுக்கு முன்பு பெறப்பட்ட படங்களில் கரும்புள்ளி இல்லை, ஆனால் கலிலியோவின் ஒன்பதாவது சுற்றுப்பாதையின் சமயத்தில் இந்த இடத்திலிருந்து வெடித்து 120 கிலோமீற்றர் (75 மைல்) உயரமாக எழுந்ததை படம் எடுத்துள்ளது. இந்தப் படம், நாசாவின் கலிலியோ விண்வெளிக்கலம் சொலிட் ஸ்டேட் இமேஜிங் (எஸ்எஸ்ஐ) அமைப்பு மூலம் 500,000 கிலோமீற்றர் (310,000 மைல்) வரம்பில் செப்ரெம்பர் 19, 1997 அன்று எடுக்கப்பட்டது ஆகும்.



# அக்குபஞ்சர்

ஒரு இந்திய அக்குபஞ்சர் மருத்துவர் சொல்கிறார்:

அக்குபஞ்சர் சிகிச்சை என்பது, சீனாவிலிருந்து, பிற நாடுகளுக்கு வந்த, நரம்பு சிகிச்சை என்கின்றனர். ஆனால், அதற்கு முன்பே, நாம், "அக்குபஞ்சர்" ரகசியத்தை, அறிந்து வைத்திருந்தோம். "தோப்புக் கரணம்" போடுவது, ஒருவகை அக்குபஞ்சர் முறை தான். அக்குபஞ்சர் நியதிகளின்படி, "வலது கண்ணின் மர்ம ஸ்தானம், இடது காதின் நுனியிலும், இடது கண்ணின் மர்ம ஸ்தானம், வலது காதின் நுனியிலும் உள்ளன. ஆகவே, காது நுனிகளை, லேசாக அழுத்தம் கொடுத்து, கீழ் நோக்கி இழுத்தால், கண் தசை நார்கள் பலம் பெறும்.

தோப்புக் கரணம் போடும்போது, கை, காதுகளைப் பிடித்துக் கொள்வதாலும், அதே சமயம், கீழ்நோக்கி தாழ்ந்து எழுவதாலும், காது நுனிகள், போதுமான அழுத்தத்தில், கீழ்நோக்கி இழுக்கப்பட்டு, கண் பார்வை கூர்மை அடைய உதவுகிறது. இதனால், கண் புரை உபாதைகள் தோப்புக்கரணம் போடுவோருக்கு வருவதில்லை என்கிறார் அவர்.

# கப்டன் மகன் ஹீரோவாகிறார்!

விஜயகாந்தின் மூத்த மகன் விஜய் பிரபாகரன்தான் முதலில் சினிமாவுக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இரண்டாவது மகன் சண்முகபாண்டியன் முதலில் களம் இறங்குகிறார். சென்னை லயோலா கல்லூரியில் விஸ்காம் படித்துக் கொண்டிருந்தவருக்கு திடீரென்று சினிமா ஆசை. விஜயகாந்த் ஓ.கே. சொன்னதும், கடந்த சில மாதங்களாக கதை தேர்வு நடந்து வந்தது. தனி குழு ஒன்று இதுவரைக்கும் கேட்ட கதை நூறைத் தாண்டும் என்கிறார்கள். கடைசியில் சண்முகபாண்டியன் ஹீரோவாக அறிமுகமாகும் படத்தை சந்தோஷ்குமார் ராஜன் என்பவர் எழுதி, இயக்குகிறார். படத்துக்கு "சகாப்தம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் விஜயகாந்த் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்யும் பூபதி, வசனங்கள் எழுதும் வேலுமணி ஆகியோர் தலைமுறை கடந்த இந்தப் படத்திலும் பணிபுரிகிறார்கள்.

# இரங்கற் போலி!



டிசம்பர் 16, 2013 "கார்டியன்" இதழில் மெய்யியலாளர் ஸ்லோவோஜ் ஸிஸெக் எழுதி வெளிவந்த கட்டுரை அவசியம் எல்லோரும் படிக்கவேண்டியது.

நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்கின்போது ஒரு வேடிக்கை அல்லது விபரீதம், எப்படியோ வைத்துக் கொள்ளுங்கள், நடந்தது. ஒபாமா உட்பட பன்னாட்டுத் தலைவர்கள் பலரும் வந்து மண்டேலாவின் மறைவு குறித்துக் கண்ணீர் மல்க இரங்கல் உரை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது கம்பீரமாக உடையணிந்த ஒரு கறுப்பர் அந்த உரைகளை செவிப்புலன் செயல்படாத மாற்றுத் திறனாளிகளுக்குச் சைகை மொழியில் பெயர்த்துக் கொண்டிருக்கிறார்.

சற்று நேரம் கழித்துத்தான் அவர் ஒரு போலி எனத் தெரிய வந்தது. அவர் சைகை மொழி தெரிந்தவரல்ல. தம்சன்கா ஜன்ட்ஜி (34) எனும் பெயருள்ள அவரைத் "தென் ஆபிரிக்க மொழிபெயர்ப்பாளர்கள்" எனும் அமைப்பிடமிருந்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி (ANC) இந்தப் பணிக்கென வரவழைத்திருந்தது.

பிடிபட்ட ஜன்ட்ஜி ஒரு கதையைச் சொன்னார். த[illegible] ப்ரெனியா நோ[illegible] அதற்கு மருந்து சாப்பிட்டு [illegible]கவும், இப்போது திடீரென அந்த நோய் தாக்கிவிட்டதாகவும் அவர் சொன்ன கதை பொய் எனத் தெரிந்த பின் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன் அவர் குறைந்த பட்சம் ஐந்து முறை திருட்டு, கொள்ளை, வன்புணர்ச்சி, ஆட்கடத்தல், கொலை உட்படப் பல கடுங் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர் எனவும், சிஸோ. ப்ரோனியா நோய் என்று கூறிச் சிறைத் தண்டனைகளிலிருந்து தப்பித்தவர் எனவும் தற்போது தெரிய வந்துள்ளது.

ஆக, உலகப் பெருந்தலைவர்கள் கூடியிருந்த ஒரு நிகழ்வில் இப்படி நடந்து போனது ஒரு பெரு வியப்புக்குரிய ஒன்றாக இப்போது ஆகியுள்ளது. கடும் பாதுகாப்பு வளையத்தை மீறி நடந்துள்ள நிகழ்வு இது. எனினும், வில்லங்கமாகச் சைகை மொழியில் தகவல் தந்து ஏதும் பயங்கரவாதச் செயலை நிகழ்த்தும் நோக்கம் அதில் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மாற்றுத் திறனாளிகளின் அமைப்புகள் ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்கின்றன. அது: "ஜன்ட்ஜியின் சைகை மொழி எந்த அர்த்தத்தையும் வெளிப்படுத்தவில்லை".

அர்த்தம் இருப்பது போன்ற ஒரு பாவனைதானே ஒழிய, உண்மையில் அது எந்தக் குறிப்பான அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை என்கிற பொருளில் அவர்கள் இதைச் சொல்கின்றனர்.

ஆனால் உண்மையிலேயே ஜன்ட்ஜியின் மொழி அர்த்தமற்றதுதானா என்கிற கேள்வியை ஸிஸெக் நம் முன் எழுப்புகிறார்.

உண்மையிலேயே சைகை மொழி பெயர்ப்பாளர்கள் செவி கேளாதோருக்காக மட்டுந்தான் வரவழைக்கப்படுகின்றனரா? இதற்கு மேலும் அதற்கொரு நோக்கமில்லையா என்கிற கேள்வியை ஸிஸெக் எழுப்புகிறார்.

இப்படி நாம் சைகை மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு நிறுத்துவது மாற்றுத் திறனாளிகளுக்கான நமது கடப்பாட்டையும் கருணையையும் வெளிப்படுத்தும் நோக்கத்தையும் உள்ளடக்கவில்லையா? அதன் மூலம் நம்மைவிடக் கீழே உள்ளவர்களுக்கு உதவும் திருப்தியை நாம் பெறுவதும் ஒரு நோக்கமாக இல்லையா?

ஸ்லோவேனியாவில் முதல் தேர்தல் 1990ல் நடந்தபோது இடதுசாரிக் கட்சி ஒன்றின் ஒரு பேச்சாளர் தன் அருகே இவ்வாறு ஒரு செவி கேளாதோருக்கான சைகை மொழிபெயர்ப்பாளரான ஒரு இளம் பெண்ணை அருகே வைத்திருந்தார். உண்மையில் அவரது மொழி பெயர்ப்பின் இலக்கு மாற்றுத் திறனாளிகள் அல்ல. மற்ற கேட்கும் திறனுள்ள வாக்காளர்கள் தான் அவரது இலக்கு. ஆம், சைகை மொழி புரியாத மற்றவர்களுக்கு அந்த மொழிபெயர்ப்பாளர் ஒரு சேதியைச் சொன்னார். தங்கள் கட்சி இப்படியான விளிம்பு நிலை மக்களுக்காகவும் உள்ளது என்பதுதான் அச் சேதி.

புயல் வெள்ளங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அல்லது எய்ட்ஸ் நோயாளிகளுக்கென நாம் செய்கிற பல "தரும காரியங்கள்" அவர்களுக்குச் சொல்கிற சேதிகளாக மட்டுந்தானா உள்ளன? பொதுமக்களை நோக்கியும் நாம் இவர்களோடெல்லாம் இருக்கிறோம், பெரிய காரியங்களை எல்லாம் செய்கிறோம் என்கிற சேதியையும் நாம் சொல்லிவிடவில்லையா?

இங்கும் அப்படித்தான்; இந்தச் சைகை மொழிபெயர்ப்பு தேவைப்படுகிற மாற்றுத் திறனாளிகள் யாரும் இருந்தார்களா என்பது அங்கு உண்மையில் பிரச்சினை இல்லை. மொழிபெயர்ப்பாளர் இருந்தார். நம்மை அவர் பெருமிதம் கொள்ளச் செய்தார் என்பதுதான் முக்கியம்.

மண்டேலாவுக்கான மொத்த இரங்கல் நிகழ்ச்சியையுமே இப்படிப் பார்க்கலாம் என்கிறார் ஸிஸெக்.

வந்திருந்த பெருந் தலைவர்கள் அத்தனைபேரும் அன்று சிந்திய முதலைக் கண்ணீர் எல்லாம் வெறும் சுய பாராட்டுச் செயல்களாகத்தானே அமைந்தன? அவை எத்தனை அபத்தம் என்பதைச் சரியாகவே ஜன்ட்ஜீயின் மொழி பெயர்ப்பு வெளிக் கொணர்ந்தது. உண்மையில் ஜன்ட்ஜீதான் அவற்றைச் சரியாக மொழி பெயர்த்தவர். பரிதாபத்திற்குரிய அந்த ஏழைத் தென் ஆபிரிக்கக் கறுப்பர்கள் ஒரு அரசியல் சக்தியாகத் திரள்வதன் மூலம் நெருக்கடி ஒன்று வெடித்தெழுவதை வெற்றிகரமாக ஒத்திவைத்த கொண்டாட்டமாகத்தானே அன்று அந்த நிகழ்வு இருந்தது?

அன்று அந்த நிகழ்வில் பங்கு பெற்றிராத அவர்களை நோக்கித்தான் அன்று ஜன்ட்ஜீ சைகை காட்டினார். அந்தச் சைகை மூலம் அன்று அவர்களுக்கு அவர் சொன்ன சேதி: "இந்த உலகத் தலைவர்களுக்கு உங்களைப் பற்றி உண்மையான கவலை ஏதும் கிடையாது" என்பதுதான். தனது போலி மொழிபெயர்ப்பின் மூலாம் உண்மையில் அன்று ஜன்ட்ஜீ அந்த இரங்கல் நிகழ்ச்சியின் போலித் தனத்தைத்தான் அம்பலப்படுத்தினார்.

ஒரு பின் குறிப்பு: எல்லாவற்றிலும் இத்தகைய அறிவிக்கப்பட்ட நோக்கத்தைக் காட்டிலும் ஒரு முதன்மையான நோக்கம் மறைந்து கிடப்பதை நாம் யோசிக்கலாம். முகநூல் பதிவுகளையுமே எடுத்துக் கொள்ளுங்களேன். நான் ஏதோ திடீரென ஸிஸெக்கின் கட்டுரை ஒன்றையோ, இல்லை ஒரு இந்துஸ்தானிப் பாடகரின் இசையையோ இங்கே பதிகிறேன் என்றால் அது சொல்லும் செய்தி அல்லது வெளிப்படுத்தும் கலை நுட்பங்களை உங்களுக்கு அறிமுகப் படுத்துவது என்பதைக் காட்டிலும் இன்னொரு முதன்மையான ஒரு செய்தியை அதன் மூலம் நான் வெளிப்படுத்தலாம். அது: நான் ஏதோ வெறும் அரசியல் கட்டுரையாளன் மட்டுமல்ல: இந்த மாதிரி விஷயங்களிலும் ஆர்வமுள்ளவன் அல்லது விற்பன்னன் என்கிற சேதியாக அது இருக்கலாம்.

**– அ.மார்க்ஸ் –**







# நாவற்குழி மண்ணும் நகர்ப்புறம் சார்ந்த வாழ்வியலும்

**வரலாறு.................**


இந்து சமுத்திரத்தின் சொர்க்க புரியாகிய ஈழத்திரு நாட்டின் தனித்தமிழர் தாயகமாய்த் தனிச் சிறப்புப்பெற்ற திடல் யாழ் பூமி . கடல் அலைகள் தாலாட்டக் களிப்புட னும் வனப்புடனும் வாழ்ந்திருந்த யாழ்ப்பாணமும் அதன்



கண் அமைந்துள்ள "கிராமங்களும் யுத்த அரக்கனின் கரங் களில் சிக்குண்டு சின்னாபின்னமாகிச் சிதறுண்ட கதை உலகறியும் . யாழ் மண்ணின் ஒவ்வொரு கிராமும் தன்னிறைவு பெற்று வாழ்ந்ததெனில் அது மிகையாகாது பெயர்பெற்று, புகழ்பரப்பி பெருமையுடன் வாழந்த கிராமங் களில் நாவற்குழியும் ஒன்று. வயலும் வயல்சார்ந்த ஓர் மருத நிலமாகும். இது யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ9 வீதியில் ஏறத்தாழ 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஓர் நகரம் ஆகும். இவ்விடத்தில் இருந்து ஏ32 நாவற்குழி – மன்னார் வீதி ஆரம்பிக்கின்றது. ஆனையிறவுப் பகுதியூடாகப் பிரயாணிக்கமுடி யாது இருந்த காலத்தில் இப்பகுதியூடாகவே மக்கள் பிரயாணித்தனர். இதைவிட இப்பகுதியில் மீனைப் பழுதடையாது வைத்துக்கொள்ளப் பயன் படும் பனிக்கட்டித் தொழிற்சாலையும் அமைந் துள்ளது. இப்பகுதியில் யாழ் அரச அலுவலகத்தில் உலக உணவுத் திட்டத்தின் ஊடான அனுசர ணையுடன் உணவைச் சேமிக்கும் களஞ்சி யப்பகுதியும் காணப்படுகின்றது.

## அறநெறி வாழ்வியல்


மதங்கள் சங்கமிக்கும் மாண்புமிகு நகரம் இது கோயில் இல்லா ஊரில் குடியிருக்கலாகாது என்பது முதுமொழி . ஒரு மனிதனின் வாழ்வில் மத வழிபாடு என்பது இரண்டறக் கலந்து விட்ட ஒன்றா கும் . எங்கு நோக்கினாலும் இந்து , கத்தோலிக்க வணக்கத் தலங்களைக் காணலாம் . இம் மக்கள் இறை வழிபாட்டில் மிகவும் நம்பிக்கை உள்ளவர் கள் . ஒரு கோயிலா , இரண்டு கோயிலா , எத்தனை கோயில்கள் மாறி மாறி ஒலிக்கும் அந்த மணி ஓசையின் இன்ப நாதம் இன்றும் காதிற்கேட்கிறது. கோயில் கோபுரமும் கோயில் வீதிகளும் மிகச் சிறப்புற அமைந்து தென்னை மரங்கள் அரண்செய்ய அழகுற அமைந்த இடம் .இக்கோயிலைச் சுற்றி மக்கள் செறிந்தே வாழ்கின்றனர் . நாவற்குழி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 10 – 08 – 2013 அன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றததுடன் ஆரம்பமாகி 12 தினஙகள் நடைபெறறது . 19 – 08 – 2013 அன்று தேர்த் திருவிழாவும், 20 – 08 – 2013 அன்று தீர்தத் திருவிழாவும் இடம்பெற்றது. இம்முறை புதிதாக பூங்காவனத் திருவிழா சேர்கப்பட்டுள்ளது இத்திருவிழாவானது இளைஞர்களுக்கான



பொதுத்திருவிழாவாக வழங்கப்பட்டுள்ளதுடன்·உபயகாரராக சித்தி விநாயகர் சனசமுக நிலையம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பூங்கா வனத் திருவிழா தீர்தத் திருவிழாவுக்கு அடுத்த நாள் 21 – 08 – 2013 அன்று இடம்பெற்றது. திருவிழா நாட்களில் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் நன்மை கருதி 12 தினங்களும் அன்னதானம் வழங்க வும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது...











# கைதடி விக்னேஸ்வரா வித்தியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா

(கிளிநொச்சி)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு வைரவிழா நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் பாடசாலை முதல்வர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக. வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சியின் ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சததியநாதன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் செ.கார்த்திக் வட மாகாண வருமானக் கணக்காளர் செ.உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி கு.சிவானந்தம், பழைய மாணவரும், நாவலப்பிட்டி பொது வைத்திய சாலையின் மருத்துவருமான தமயந்தி குணபாலசிங்கம், சீஈசீபி நிறுவன் பொறியியலாளர் கு.ஜெயமோகன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக கணக்காய்வாளர் தி.திருவருட்செல்வன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (90)

# வேலணை சுகாதார பணிமனையினால் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி



(மண்டைதீவு)

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதாக வேலணை சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இதன் கீழ் நேற்று முன்தினம் புதன்கிழமை மண்டைதீவுப்பகுதியில் சுமார் 120 வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டிருப்பதாக அந்தப்பகுதிக்கான சுகாதாரப்பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இந்தத்திட்டத்தின் கீழ் வரும் காலத்தில் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மண்டைதீவுப்பகுதியில் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வளர்ப்பு நாய்களுக்கு இந்த தடுப்பூசி மருந்து ஏற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (பா)

# பாரம்பரியவைத்திய சங்கங்களின் இணையத்தின் தேசிய மாநாடு

(வேலணை)

இலங்கை தேசிய பாரம்பரிய வைத்தியர் சங்கங்களினது இணையத்தின் 4ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 2014 ஜனவரிமாதம் 14ஆம் திகதி மதவாச்சியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி இணையத்தின் இயக்குநர் சபையினது கூட்டம் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வட இலங்கை சுதேச வைத்தியர் சபையினது பணிமனையில் இடம்பெற்ற போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இணையத்தின் பொதுச் செயலாளரான டாக்டர் க.திருலோகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய பாரம்பரிய இணையத்தின் தலைவர் வைத்தியர் கலாநிதி செ.செல்வமகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் சுதேச வைத்தியர்கள் எதிர்நோக்கிவருகின்ற சமகால பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் ந.யோகநாதன் மற்றும் பிரஸ்தாப இணையத்தின் பொருளாளர் வைத்திய கலாநிதி இ.சற்குருநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)

## வெள்ளி நற்சிந்தனை...



# ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் தியானம்

சைவ சித்தாந்த தத்துவத்தோடு, அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கையும் பின்னிப்பிணைந்திருக்கிறது. இந்தப் பெரியவர்களின் வாழ்க்கைகளைத் தெய்வமணம் கமழும் மாலையாகப் பெரிய புராணத்தில் சேக்கிழார் தொடுத்துக் கொடுத்திருக்கிறார். 4286 செய்யுள் கொண்ட தெய்வீகநூல் பெரியபுராணம்.

பெரிய புராணத்தில் தெய்வக்கட்டளைகள் உண்டு: புத்திமதிகள் உண்டு: ஆன்மீகக் கருத்துக்கள் உண்டு: பெரியபுராணம் அறிவுக்கு விருந்து படைப்பதோடு, உணர்ச்சிகளுக்கும் சேர்ந்தே விருந்து படைக்கிறது.

சோழப் பெருமன்னனிடம் முதலமைச்சராக இருந்த சிறப்பைப் பெற்றவர், பெரியபுராணம் பாடிய சேக்கிழார். மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடிய பேரிலக்கியத்தை அவர் படைத்துக்கொடுத்திருக்கிறார்.

சேக்கிழார் தம்முடைய நூலுக்குக் கொடுத்த தலைப்பு, திருத்தொண்டர் புராணம் என்பது. அதனுடைய தவத்தாலும் பெருமையாலும் பெரிய புராணம் என்கிற சிறப்புப் பெயரை அது பின்னாலில் பெற்றது.

நாயன்மார்கள் பல சாதியினராக பிறந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய இறை பக்தியும் மனிதாபிமானமும் தன்னலமற்ற தொண்டும் அவர்களை ஒன்றாக இணைத்து வைத்தன. அவர்கள் பக்தி வாழ்க்கை வாழ்ந்தார்கள். தூய வாழ்க்கை வாழ்ந்தார்கள் ஏன்? தெய்வீக வாழ்க்கையே வாழ்ந்தார்கள்.

கடவுள், ஆன்மா பந்தம் ஆகிய மூன்றைப் பற்றியும் சைவ சித்தாந்தம் பேசுகிறது. கடவுளும் ஆனமாவும் அழிவில்லாதவை. பிறப்பு, மரணம் ஆகியவை மாறிமாறி வரும்போது கிடைக் கின்ற அறிவாலும் அனுபவத்தாலும் ஆன்மா புத் தொளி பெற்றுத் தெய்வீக நிலைக்கு உயர்கிறது.

மனிதனாகப் பிறக்கின்ற ஒவ்வொருவரும் அதி மனிதனாக இறக்க வேண்டும் என்கிற இலட்சியத்தோடு வாழ வேண்டும். அதற்கான களம் தான் உலகம். அதற்கான வாய்ப்புத்தான் இந்தப் பிறவி.

நாயன்மார்களும், சைவ சமயாச்சாரியர்களும் முப்பெரு விடயங்களில் நீங்காத பற்றுக் கொண்டவர்களாக இருந்தார்கள்.

**ஆனந்த நடமிடும் நடராஜரிடம் மாறாத பக்தி**
**பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாமல் உச்சரித்தல**
**விபூதியிடம் நம்பிக்கையும் மரியாதையும்.**

சைவசமயம் தியாக மனப்பான்மையினையும், சேவை உணர்ச்சிகளையும், பற்றற்ற தன்மையினையும், ஆன்மிக வாழ்வுக்கு வழிகாட்டியாக எடுத்துக் காட்டுகிறது.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

## தோழர் ஹிட்லர்

வருக
தோழர் ஹிட்லர்
வருக வருக.

இது உங்கள் வீடு,
எல்லா வீடுகளும்
உங்களுடையதுதான்.

தோழர் ஹிட்லர்
அன்புகூர்ந்து கொஞ்சம்
தேநீர் அருந்துங்கள்.

வரவேற்பதில்
பெருமையடைகிறேன்

எல்லோராலும்
தவறாக புரிந்துகொள்ளப்பட்ட
ஒரு மனிதரை,

இந்த நூற்றாண்டின்
மிகச் சரியான மனிதரை...

வரலாறு
நீங்கள் தற்கொலை
செய்துகொண்டதாக
குறிப்பிடுகிறது.

அது எப்போதும்
இத்தகைய பொய்களையே
உருவாக்குகிறது.

மற்றவர்களைப் போல
நானும் அதை
நம்பியிருந்தால்
இப்போது உங்களை
அடையாளம் காண
முடியாமல் போயிருக்கும்.

உங்கள் பெயர் மாறலாம்
உருவம் மாறலாம்

ஆனால்
நீங்கள்
நீங்கள்தான்.

எத்தனையோ காலத்துப்
போராட்டம்.

உங்களை
யாரும் அழிக்கமுடியவில்லை.

நீங்கள்
அதிகமான
அபவாதத்திற்கு
ஆளாகிவிட்டீர்கள்.

எல்லாக் குற்றங்களையும்
தனியொருவன் தலையில்
சுமத்திவிடுவது
நியாயமில்லாதது.

நீங்கள்
பிறரது அடிபணிதலை
விரும்பினீர்கள்
அது குற்றமா?

இங்கு
மற்றெல்லோரும் விரும்புவது
இதைத் தவிர வேறென்ன?

யாரையாவது
அதட்ட முடியாத மனிதன்
தற்கொலை
செய்துகொள்கிறான்.

அல்லது
பைத்தியம் பிடித்துவிடுகிறது.

தோழர் ஹிட்லர்
இலட்சக்கணக்கான
யூதர்களை
படுகொலை செய்தீர்கள்.

நீங்கள்
ஏதோ கொடியவனாய்
இருந்ததால் அல்ல.

துரதிர்ஷ்டவசமாக
உங்கள் கையில்
ஒரு பெரிய கத்தி
கிடைத்துவிட்டது.

அது உங்களுடைய
தவறன்று.

என்னிடம்
இருக்கும் குண்டூசியினால்
நான் என்ன செய்யமுடியுமோ
அதைச் செய்துகொண்டு
தானிருக்கிறேன்.

உங்களுக்கு
உலகம் முழுவதும்
தேவைப்பட்டது.

சந்தேகமில்லாமல்
இங்கே
ஒவ்வொருவருக்கும்
அவ்வாறே தேவைப்படுகிறது.

ஆனால்
உங்கள் பெயர்
வெளியே வந்துவிட்டது.

இன்றைய விலைவாசியில்
கொஞ்சம் அதிகாரத்தை
வாங்க முடியுமானால்

நான் என்னை
வந்த விலைக்கு
விற்றுவிடுவேன்.

அது
ஒரு டீஸ்பூன்
உள்ளே போனாலும்
யாரை என்ன செய்வேனென்று
எனக்குத் தெரியாது
அடுத்தவர்களுக்கும் தெரியாது.

மற்றவர்களுக்காக
தான் முடிவெடுக்கும்
பெருந்தினவுக் கொள்ளைநோய்
எல்லா இடத்திலும்
பரவியிருக்கிறது.

சீழ்வைத்துப் புண்ணாகி
வலியால் தெறிக்கின்றன
நம் உறவுகள்.

ஒவ்வொரு இலட்சியமும்
அப் புண்ணையே
நக்கி வாழ்கின்றன.

தலைவர்கள்
தொண்டர்கள்
கணவர்கள்
ஆசிரியர்கள்
அதிகாரிகள்
பியோன்கள்
மருத்துவர்கள்
கலைஞர்கள்
தெய்வங்கள்
மனித தெய்வங்கள்...

நாங்கள்
அனைவரும் விரும்புவது
தோழர் ஹிட்லர்
நீங்கள் விரும்பியதைத்தான்.

நாங்கள் அனைவரும் செய்வது
நீங்கள் செய்ததைத்தான்.

நீங்கள்
கனவு கண்ட
வாழ்க்கை முறையை
சாம்ராஜ்ஜியத்தை
பெருமளவு உருவாக்கிவிட்டோம்.

இனி என்றும்
எம்மோடு இரும்.

எம்மை
வழிநடத்திச் செல்லும்.

உமது பரிசுத்த ஆவி
உம் பிள்ளைகள் மீது
பூரணமாய் கவியட்டும்.

– மனுஷ்யபுத்திரன்

# சீரான மக்கள் பணிக்காக கட்சியில் மறுசீரமைப்பு



மக்களுக்கான பணிகளை சீராக முன்னெடுப்பதற்கு வசதியாக ஈ.பி.டி.பி கட்சியின் அனைத்து மட்டங்களிலும் மறுசீரமைப்பை முன் னெடுக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் வலிகாமம் தெற்கு அலுவலகத்தில் இடம்பெற்ற ஆதரவாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில கட்சிககாக நீண்டகாலம் பணியாற்றிய அதன் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்ளன பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

இதில் அவர்மேலும் உரையாற்றுகையில், கட்சி மூலமான வேலைவாய்ப்பு, மக்களுக்கான உதவித் திட்டங்களுக்காக பயனாளிகளை தெரிவுசெய்யும் போது கிராம மட்டத்தில் மக்களுடன் நேரடியான தொடர்பை கொண்டுள்ள கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகள், கருத்துக்களை கவனத்திலெடு த்தே இனித் தீர்மானங்களை மேற்கொள்ள உள்ளோம்.

குறிப்பாக, வேலைவாய்ப்புக்கான பயனாளிகள் தெரிவில் தேவையான கல்வித்தகைமைகளோடு மக்களுக்காக கட்சியுடன் இணைந்து நேர்த்தியாக புணிகளை முன்னெடுப்பவர்கள் தமது மக்கள் பணியை தொடர்வதற்கு வசதியாக இதற்கென எம்மால் முன்னுரிமைப் படுத்தும் வகையில் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

உள்ளூராட்சிக்கான தேர்தல்களில் இனி வட்டார முறை அமுலுக்கு வருவதால் வெறுமனே விருப்பு வாக்குகளுக்காக கட்சி உறுப்பினர்கள் தமக்குள் மோதிக்கொள்வதை தவிர்த்து கட்சிக்காக இணைந்து பிரசாரங்களை முன்னெடுக்க வாய்ப்புக்கள் கிட்டுமென எதிர்பார்க்கிறோம் என்றார்.

இந்நிகழ்வில் கட்சியின் வடமராட்சி இணைப்பாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் கோபபாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன்,தென்மராட்சி இணைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்), அச்சுவேலி இணைப்பாளர் தர்ம ராஜா, வலி.வடக்கு இணைப் பாளர் வலன்டயன், காரைநகர் இணைப்பாளர் வி.கண்ணன் (ரஜனி), வேலணை பிரதேச இணைப்பாளர் சின்னையா சிவராசா,( போல்), உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சேமலாப நிதியால் 8.1 பில்லியன் ரூபா இழப்பு

ஊழியர் சேமலாப நிதியை பங்குச் சந்தையில் முறையற்ற வழியில் முதலீடு செய்யப்பட்டமையால் தற்போதைய சந்தை நிலைவரப்படி 8.1 பில்லியன் ரூபா இழக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி.சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை நிதி நிறுவனங்களிலும் வங்கிகளிலும் முதலீடு செய்யக்கூடாதென தெளிவாக கூறப்பட்டுள்ளபோதும் அந்த கோட்பாடு மீறப்பட்டுள்ளது என்றார்.

# போலிப் பட்டதாரி ஆசிரியர் கைது

(கொழும்பு)

போலிச் சான்றிதழ்களை கொடுத்து பட்டதாரி ஆசிரியர் பணிக்குச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நுகேகொடையில் உள்ள பிரபல பாடசாலையான புனித ஜோசப் கல்லூரியில் 2008 ஆம் ஆண்டு இந்த நபர் போலிச் சான்றிதழ்களைக் கொடுத்து ஆசிரியராகப் பணிக்கு சேர்ந்துள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்விச் சான்றிதழ் எனக் கூறி இந்த நபர் போலிச் சான்றிதழை சமர்பித்துள்ளார்.

கடந்த ஆறு வருடங்களாக இந்த நபர் குறித்த ப்டசாலையின் ஆசிரியராக பணியாற்றி வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மோசடி தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த முறைபபாட்டை அடுத்தே இந்த நபர் கைது செயயப்பட்டுள்ளார்.

# சித்திரம் வரைதலில் முதலிடம்



(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சித்திரம் வரைதல் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயிலும் கணேசராஜா பிரணவன் முதலிடத்தை பெற்றுள்ளார்.

கொழும்பு கல்கிசை சென். தோமஸ் கல்லூரி, யாழ் சென்ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான 12 வயது நிரம்பிய கணேசராஜா பிரணவன் சதுரங்கம், மற்றும் ரென்னிஸ் ஆகியவற்றில் பதக்கங்களையும், பரிசில்களையும் பெற்றிருப்பதுடன் கல்வியிலும் றோயல் கல்லூரிக்கு பெருமை தேடித் தந்து சகல துறையிலும் பிரகாசிப்பது குறிப்பிடத்தக்கது.

கணேசராஜா பிரணவன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவின் புதல்வன் என்பது குறிப்பிடத்தக்கது. (170)

# பட்டாசு நிலையத்தில் தீ

மீகமுவ பகுதியில் பட்டாசு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மீகமுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், உற்பத்தி நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. எனினும், சேதவிபரங்கள் பற்றிய முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை. மீகமுவ பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குண்டு தயாரித்தவர் கைது

குண்டுகளை தயாரித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸிலிருந்து விலகிச் சென்ற ஒருவரே இவ்வாறு குண்டு தயாரித்துள்ளார்.

குறித்த முன்னாள் பொலிஸ் கான்ஸ்டப்பிள் அதி நவீன முறையில் வித்தியாசமாக கைக்குண்டுகளை தயாரித்துள்ளார். குறித்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

சைக்கிள் இரும்புக்குண்டுகள் உள்ளிட்ட பல பொருட்களைப் பயன்படுத்தி இந்தக்குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

# வலுவிழந்தோரை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அங்கீகாரம்

மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக வலுவிழந்தோருக்கான ஒரு தேசிய வேலைத் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி வலுவிழந்தோருக்கு இலங்கையில் சம அந்தஸ்துள்ள பிரஜைகளாக பூரணமான வாழ்வை அனுபவிக்கவும், தேசத்தின் அபிவிருத்திக்கு தமது அறிவு, அனுபவம், சிறப்புத்திறன்கள் மற்றும் ஆற்றல்களை பயன்படுத்திப் பங்களிக்கவும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தேசிய வேலைத்திட்டமானது வலுவூட்டல், சுகாதாரம் , புனர்வாழ்வு, கல்வி,வேலை மற்றும் தொழில்வாய்ப்பு, சமூகத்துடன் ஒன்றுதல் , சாதகமான சுற்றுச்சூழல் , தரவுகள் , ஆராய்ச்சி மற்றும் நிறுவனத்தோடு இணைந்திருத்தல் எனும் விடயங்களை சாதிக்கவென வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசாங்கம் 65 பில்லியன் ரூபாவை 2014-2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் செலவழிப்பதற்காக ஒதுக்கியுள்ளது. சமுகசேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இத்திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து முன்மொழிய அமைச்சரவை அங்கீகரித்தது.

# அரச சேவையில் காணப்படும் வேதனப் பிரச்சினைக்கு தீர்வு

(கொழும்பு)

அரச சேவையில் காணப்படும் வேதனப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக வேதனங்கள் ஆணைக் குழுத்தலைவர் ஜயலத் ரவி திசாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரச சேவைத்துறையில் காணப்படுகின்ற வேதனப் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கான தகவல்களை திரட்ட, வேதனங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. வேதனப் பிரச்சினைகள் தொடர்பில் பாரிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் குறித்து தெளிவான தகவல்களை திரட்டி, அதனை தீர்ப்பதற்கான ஆணைக்குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குடையால் அடித்து பயணியைக் கொன்றவருக்கு 20 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறை

கொத்தட்டுவ நகரத்தில் வைத்து பயணி ஒருவரை குடையால் தாக்கிக் கொன்றமைக்காக தனியார் பேருந்தில் நடத்துநராக கடமை புரிந்தவருக்கு இருபது வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதியே நடத்துநர் பயணியை தாக்கியுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட சாமில சம்பிக்கா என்பவருக்கும் பயணியான விஜேதாஸ என்பவருக்கும் இடையில் குறித்த தினத்தன்று வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போதே நடத்துநர் பயணியை குடையால் அடித்து கொன்றதாக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபரான பேருந்து நடத்துநர் தனக்கு எதிரான குற்றத்தை ஒத்துக் கொண்டார்.


இதனையடுத்தே இது கைமோசக்கொலை என அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய அவருக்கு 20 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2வருட கடூழியசிறைத் தண்டனை வழங்கி பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துக்கு 150,000 ரூபா நட்டஈடு செலுத்தும்படியும் உத்தரவிட்டார்.

# பகிடிவதையில் ஈடுபட்டவர்களுக்கு ஆறு வருட கடூழிய சிறை

பகிடி வதையில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆறு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக கழக மாணவர் ஒருவரை பகிடிவதைக்குட்படுத்தியமை மற்றும் பாலியல் இம்சை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த மூன்று மாணவர்கள் தொடர்பான வழக்கின் தீர்ப்பினை நேற்றுமுன்தினம் கண்டி மேல் நீதிமன்றம் வழங்கியது.

2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் அல்லது 27ஆம் திகதி, பேராதனை பல்கலைக்கழகத்தில் வைத்து குறித்த மாணவர் இவ்வாறு இம்சிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதன்படி அவர்களுக்கு 5 முதல் ஆறு வருடங்களுக்கு கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.



# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## உயிரியல் I

ஆசிரியர்
திரு.கஜேந்திரன்


1) பின்வருவனவற்றுள் எதனை ஓர் உயிரியல் மூலக்கூறாக கருதமுடியாது?
1) காபோவைதரேற்று 2) புரதம் 3) நியுக்கிளிக் அமிலம்
4) இலிப்பிட்டு 5) ATP

2) அழுத்தமான அகமுதலுருச் சிறுவலை மிகக்கூடியளவில் காணப்படுவது?
1) தசைக்கலங்களில் 2) அண்மையான மடிந்தகுழலுருவில்
3) செங்குருதிக்கலங்களில் 4) சிறுநீர்ப்பை மேலணிக்கலங்களில்
5) சதையிக்கலங்களில்

3) புரதம் ஒன்றின் அமைப்பழிவு என்பதனை எடுத்து விளக்குவது,
1) புரதத்தின் முதலான கட்டமைப்பு மாறுதல்.
2) பெப்ரைட்டு பிணைப்புக்களும், இரு சல்பைட்டு பிணைப்புக்களும் உடைக்கப்படுதல்.
3) புரதத்தின் புடையான கட்டமைப்பு இழக்கப்படுதல்.
4) பெப்ரைட்டு பிணைப்புக்களின் நீர்ப்பகுப்படைதல்.
5) புரதமூலக்கூற்று வடிவத்தில் ஏற்படும் தற்காலிக மாற்றம்.

4) கலப்பிரிவுச் செயன்முறையில், DNA இன் தற்பகர்ப்பு நடைபெறுவது,
1) இடை அவத்தையில் 2) முன் அவத்தையில்
3) அனு அவத்தையில் 4) மேன்முக அவத்தையில்
5) ஈற்று அவத்தையில்

5) சுவாசவீதம், வெப்பநிலை தொடர்பான மாற்றத்தைத் திறம்பட எடுத்துக்காட்டும் வரைபு, (X அச்சில் வெப்பநிலை, Y அச்சில் சுவாசவீதம்)




6) நீர் விருப்புள்ள பதார்த்தங்களினால் நீரழுத்தப்படித்திறன் சார்பாக, நீர்மூலக்கூறுகள் புறத்துறுஞ்சப்படுவதனால் ஏற்படும் நீரின் அசைவு,
1) உட்கொள்ளுகை 2) திணிவோட்டம்
3) பரவல் 4) குழியக்குடிதல்
5) உயிர்ப்பான அகத்துறுஞ்சல்

7) விலங்குகளில் கட்டமைப்பிலும், தொழிற்பாட்டிலும் புரதங்களே சகல உயிர் சார்ந்த மூலக்கூறுகளிலும் பன்மை நிலையை உச்சமாகக் காண்பிக்கும் மூலக்கூறுகளாகும். அவற்றின் கட்டமைப்பு, தொழிற்பாட்டு தொடர்புகளில் பிழையானது?
1) Immunoglobin - பாதுகாப்பு
2) Trypsin - உணவுச் சமிபாடு
3) Insulin - ஒரு சீர் திடநிலையைப் பேணுதல்
4) Haemoglobin - கடத்தல்
5) Elastin - முதலான சக்திக் களஞ்சியம்

8) பின்வரும் தாவரக்கூட்டங்களுள் எது கட்டமைப்பு ரீதியான பன்மைத்துவத்தை பெருமளவில் காண்பிக்கின்றது?
1) Lycopyta 2) Pteropyta 3) Bryopyta
4) Anthopyta 5) Cycadopyta

9) பின்வரும் மூலகங்களுள் எந்தவொரு மூலகம் தாவரங்களில் மிகக்குறைந்தளவில் குடிபெயரக்கூடியது?
1) N 2) P 3) Fe 4) K 5) Mg

10) சுவானின் கலங்களினால் சூழப்பட்ட நியூரோன்களில் முனைவழிதல், மீள் முனைவாக்கம் என்பவை நிகழ்வது,
1) இரன்வியரின் கணுக்களில் 2) கலவுடலில்
3) மயலின் கவசங்களில் 4) வெளிக்காவு நரம்பு முனைகளில்
5) கலமுதலுருவில்

11) நீண்ட காலத்துக்குரிய இருகருக்கூட்டு நிலை காணப்படுவது,
1) Mucor 2) Agaricus 3) Saccharomyces
4) Allomyces 5) Aspergillus

12) பின்வருவனவற்றுள் வீக்கமாற்றம் காரணமாக நிகழும் அசைவுக்கு உதாரணமாக அமையாதது.
1) தொட்டாற்சுருங்கி தாவரங்களின் இலைகள் இரவில் வாடுதல்.
2) Daisy பூ மலருதல்.
3) தாமரை, அல்லி என்பனவற்றின் பூக்கள் ஒளியில் விரிதல்.
4) Tulip பூக்கள் சூரியனின் பிரசன்னத்துடன் மலருதல்.
5) அகத்தி இலைகள் இரவில் வாடுதல்.

13) Symplast பாதை, புன்வெற்றிடப்பாதை வழியாக மாத்திரம் நீரின் அசைவு இடம்பெறுவது,
1) வேரின் அகத்தோல் 2) வேரின் பரிவட்டவுறை
3) தண்டின் மையவிழையம் 4) வேரின் மேற்பட்டை
5) இலைநடுவிழையக்கலங்கள்

14) சிறுநீரகத்தியின் அண்மையான மடிந்தகுழலுரு பகுதியில், கலன்கோளவடிதிரவத்துக்கும், குருதிக்கும் இடையிலான பதார்த்தப் பரிமாற்றங்களில் தவறானது?
1) நீர் - பிரசாரணம்
2) குளுக்கோசு - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்
3) யூரியா - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்
4) K + - உயிர்ப்பற்ற மீளஅகத்துறிஞ்சல்
5) Na+ - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்

15) அதிரீனலீ ன் ஓமோனின் செயற்பாடு தொடர்பான சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) குருதிக் குளுக்கோசு மட்டத்தை குறைவடையத்தூண்டும்
2) சுவாச வீதத்தினைக் குறைவடையச் செய்யும்.
3) உடல் அனுசேபவீதத்தினைக் குறைவடையச் செய்தல்.
4) ஈரலில் கிளைக்கோசனை குளுக்கோசாக மாற்றுதல்.
5) கண்மணியினை சுருங்கச்செய்தல்.

16) சிற்றிடைவெளி இழையத்தில் அமீபாப்போலி அசைவினைக் காட்டும் திறனுடைய கலம் எது?
1) நார் அரும்பர்கலம் 2) பெருந்தின்கலம்
3) அடிநாட்டக்கலம் 4) முதலுருக்கலம்
5) கொழுப்புக்கலம்

17) உயிரியல் படிக்கின்ற ஒரு மாணவன், விலங்கு ஒன்றின் பெயரைக் குறிப்பிடும்போது சாதிப்பெயரினையும், இனத்துக்குரிய வேறுபடுத்திப் பெயரினையும் இரு வேறு சொற்களாகக் குறிப்பிட்டான். இது, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும். இதனை அறிமுகப்படுத்திய விஞ்ஞானி
1) Ernest Hackle 2) Robert Wittakar
3) Carl Wose 4) Theophrustus
5) Carolaus Linneaus

18) பூச்சிகளின் சுவாசக்கட்டமைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள், பிழையானது?
1) இவற்றின் சுவாசமேற்பரப்பாக புன்வாதனாளிகள் காணப்படும்.
2) இவை கலனற்ற சுவாசக்கட்டமைப்பாக தொழிற்படும்.
3) புன்வாதனாளிகளில் கைற்றின் தடிப்புகள் காணப்படமாட்டாது.
4) சுவாசத்துவாரங்களில் தடித்த மெழுகுப்படை காணப்படுவதனால், பூச்சிகளில் நீர் இழக்கப்படுவது குறைக்கப்படும்.
5) புன்வாதனாளியூடான வாயுக்கடத்தலில் குருதி பங்கேற்கமாட்டாது.

19) பின்வருவனவற்றுள் பிசிர்கள் அல்லது சவுக்குமுனைகள் எக்கூட்டத்தில் ஒருபோதும் காணப்படுவதில்லை?
1) Nematoda 2) Annelida
3) Mollusca 4) Cnidaria
5) Echinodermate

20) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கங்கள் தொடர்பாக தவறான கூற்று
1) அவை பச்சைய உருமணியின் தைலகோயிட்டு மென்சவ்வில் நடைபெறும்.
2) இதன்போது விளைவாக ATP சக்தி மாத்திரம் உருவாக்கப்படலாம்.
3) நிறமாலையின் சிவப்பு, பச்சைப் பகுதிகளிலேயே ஒளித்தாக்கவீதம் உயர்வானதாகக் காணப்படும்.
4) ஒளித்தாக்கங்களில் சம்பந்தப்பட்ட இலத்திரன் வாங்கிகளும், காவிகளும், தைலகோயிட்டு மென்சவ்வுக்கு இடையில் அமைந்துள்ளன.
5) ஒளித்தொகுதி II இன் $P_{6sc}$ இனால் இழக்கப்படும். இலத்திரன்கள் நீரின் ஒளிப்பகுப்பின்போது விடுவிக்கப்பட்ட இலத்திரன்களால் மாற்றீடு செய்யப்படும்.

21) மனித சதையி தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
1) சதையச்சாறு மூன்று புர்தப்பிரிப்பு நொதியங்கள் கொண்டது.
2) சதையச்சாற்றில் காணப்படும் insulin குருதிக்குளுக்கோசு மட்டத்தைச் சீராக்கும்.
3) Secretin கதையியின் தொழிற்பாட்டைத் தூண்டுவதன் காரணமாக அதிகளவு சமிபாட்டு நொதியங்கள் கொண்ட சதையச்சாறு சுரக்கப்படும்.
4) இதில் இலங்ககான்சு சிறுதீவுகள் காணப்படுவதனால் புறஞ்சுரப்பியாகவும், சதையகுலைகள் காணப்படுவதனால் அகஞ்சுரப்பியாகவும் தொழிற்படுகின்றது.
5) சதையச்சாற்றில் அதிகளவு சீதம் காணப்படுவதனால் முன்சிறுகுடலுக்கு வரும் உணவை திரளாக்கி வழுக்கும் இயல்பை ஏற்படுத்தும்.

22) மனித தசைகள் தொடர்பான கூற்றுக்களுள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது?
1) அருட்டப்படக்கூடியன.
2) வன்கூட்டுத்தசைகள், இதயத்தசைக் கலங்களில் வரிகள் காணப்படும்.
3) மழமழப்பான தசைகள் கிளைகளுடன் இணைக்கப்பட்டிருக்கமாட்டாது.
4) இதயத்தசைக்கலங்களை இணைத்து இடைபுகுந்த வட்டத்தட்டுக்கள் காணப்படும்.
5) வன்கூட்டுத்தசைகள், இதயத்தசைகளின் சுருக்கம் தன்னாட்சி நரம்புத் தொகுதியினால் கட்டுப்படுத்தப்படும்.

23) நொதியங்கள் எதனையும் சுரக்காததும் ஆனால் உணவின் சமிபாட்டுடன் தொடர்பானதும், உணவுக்கால்வாயுடன் தொடர்புடையதுமான கட்டமைப்பு எது?
1) ஈரல் 2) சதையி 3) இலிபர்கூனின்மறைகுழி
4) உதரச்சுரப்பி 5) உணர்கொம்புச்சுரப்பி

24) பின்வருவனவற்றுள் உரியக் கொண்டு செல்லல் தொடர்பாக தவறானது,
1) இது நேர் அமுக்கத்தின் கீழ் நடைபெறும்.
2) நெய்யரிகுழாயூடாக உணவு அசைதலில், நீர்நிலையியல் அமுக்கம் பங்குகொள்கின்றது.

3) துணைக்கலங்களுக்கும், நெய்யரிக்கலன்களுக்கும் இடையிலான முதலுரு இணைப்புக்களூடாக சேதன உணவு நெய்யரிக்கலன்களுள் சுரக்கப்படும் உயிர்ப்பான செயன்முறையாகும்.
4) இதன்போது உணவு கொண்டு செல்லப்படும் பிரதான வடிவம் சுக்குரோசு ஆகும்.
5) நெய்யரிக்குழாயூடான உணவு அசைதலில், துணைக்கலங்களில் உள்ள இழைமணிகள் பங்கு கொள்கின்றன.

25) மனிதனின் நீர்ப்பீடனத்துடன் தொடர்புடைய அகஞ்சுரப்பியும், அதன் ஓமோனும் முறையே,
1) கீழ்கழுத்துச்சுரப்பி - தைமோசின்
2) கீழ்கழுத்துச்சுரப்பி - மூ அயடோ தைரோனின்
3) கேடயப்போலிச்சுரப்பி - அல்டஸ்ரோன்
4) கபச்சுரப்பி - வளர்ச்சி ஓமோன்
5) கேடயப்போலிச்சுரப்பி - தைரொக்சின்

26) தசைக்கலங்களில் நிகழும் நொதித்தலின்போது NADH இல் இருந்து இறுதியாக $H^-$ இனை ஏற்கும் சேர்வை எது?
1) பைருவேற்று 2) எதனல் (Ethanal)
3) எதனோல் (Ethanol) 4) மூலக்கூற்று $O_2$
5) அசற்றல்டிகைட்டு

27) விலங்குகளில் குருதிச்சுற்றோட்டத்தொகுதி பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பொய்யானது?
1) திறந்த சுற்றோட்டத்தொகுதி காணப்படுதல் எல்லா மொலஸ்க்காக்களுக்கும், சிறப்பியல்பு ஆகும்.
2) மூடிய சுற்றோட்டத் தொகுதிகளில், ஒட்சிசனேற்றிய குருதியினதும், ஒட்சிசன் அகற்றிய குருதியினதும் கலப்பு நடைபெலாம்.
3) முள்ளந்தண்டு விலங்குகளிலே குருதிக்கும், இழையங்களுக்கும் இடையே பதார்த்தப் பரிமாற்றம் குருதிமயிர்க்குழாயூடாக நடைபெறுகின்றன.
4) SA கணு முலையூட்டிகளில் விரைவு வீதமாக்கியாக தொழிற்படும்.
5) மனிதனில் பெருமளவான ஒட்சிசனைக் குருதியில் காவிச்செல்வது Heamoglobin ஆகும்.

28) நரம்பிணைப்பு பிளவூடான நரம்புக்கணத் தாக்கத்தில், நரம்பிணைப்பு பிளவில் இருந்து நரம்பிணைப்பின் முன்னான மென்சவ்வுக்கும், நரம்பிணைப்பின் பின்னான மென்சவ்வுக்கும் அசையும் அயன்கள் முறையே,
1) $Ca^{++}$, $K^-$ 2) $Ca^{++}$,Na
3) $Na^-$, $Ca^{++}$ 4) $Ca^{++}$, $Cl^-$
5) $K^-$, $Cl^-$

29) வித்தகவிழையக் கலங்களில் காற்றுச்சுவாசம் ஒன்றில் சுவாசக்கீழ்ப்படை அடையும் இரசாயண மாற்றம் தரப்பட்டுள்ளது.
$C_6H_{12}O_6 + 6\,O_2 \rightarrow 6CO_2 + 6H_2O$
இதிலிருந்து அறியக்கூடிய சுவாச ஈவின் பெறுமானம்
1) 2.0 2) 0.5 3) 1.0 4) 0.7 5) 0.9


30) மனிதனின் பற்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது?
1) அவை யாவும் தனிவேருடையன.
2) மனிதனில் உதிர் பற்களின் எண்ணிக்கை 22 ஆகும்
3) பற்களின் பெரும் பகுதியினை பன்முதல் ஆக்குகின்றது.
4) மனிதனில் உதிர் பற்களில் கடவாய்ப்பற்கள் காணப்படுவதில்லை.
5) இவை மேல், கீழ்த்தாடைகளின் குழிகளில் அமைந்த ஓரினப்பற்களாக காணப்படும்.

31) சுகதேகியான மனிதனின் செவியில் சமநிலையை பேணுதலுடன் தொடர்புடைய வாங்கிகளைக் கொண்டுள்ள ஒரு கட்டமைப்பு,
1) தோற்பை 2) செவிப்புலனுக்குரிய கால்வாய்
3) செவி நரம்பு 4) அடிமென்சவ்வு
5) நீள்வட்டப்பலகனி

32) குருதியிலே ADH அதிகரிக்கும்போது மனித சிறுநீரகத்தியில் நீர் அதிகளவு மீள அகத்துறிஞ்சப்படுவது?
1) அண்மையான மடிந்தகுழலுரு 2) சேர்க்கும் கான்
3) என்லெயின் ஏறும்தடம் 4) சேய்மையான மடிந்தகுழலுரு
5) என்லெயின் இறங்கும் அவயவம்.

33) மனிதனில் அதிபரவிழுவிசைக்குக் காரணமாக அமையாதது பின்வருவன வற்றுள் எது?
1) மன அழுத்த நிலை
2) குருதியில் குறைவடர்த்தி உள்ள இலிப்போபுரத்தின் அளவு அதிகரித்தல்.
3) அதிகளவு மதுபானம் அருந்துதல்.
4) வயதாதல்
5) குருதியில் Oestrogen ஓமோனின் அளவு அதிகரித்தல்.

34) படத்தில் காட்டப்பட்டுள்ள கலம், கரைசல் தொகுதி தொடர்பான கூற்றுக்களுள் தவறானது எது?




1) இக்கலத்தின் நீரழுத்தம் -450kPa ஆகும்.
2) இக்கரைசல்த் தொகுதி ஓர் அதிபிரசாரண கரைசலாகும்.
3) கலம் முதலுருச்சுருக்க தொடக்க நிலையில் இருக்கும் போது கலத்தின் அமுக்க அழுத்தம் +350kPa ஆகும்.
4) கலம் சமநிலையில் காணப்படுகையில், கலத்தின் கனவளவு குறைவடைந்து காணப்படும்.
5) இக்கலத்தின் கரைய அழுத்தம் மாறாது காணப்படும்.

35) சுகதேகி மனிதன் ஒருவனின் இயக்க நரம்புக்கலத்தின் ஓய்வுமென்சவ்வு அழுத்தம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது?
1) அது கிட்டத்தட்ட - 70m V ஆகும்.
2) இதனைப் பேணுவதற்கு ATP சக்தி பயன்படும்.
3) இது தூண்டலினை வாங்கக்கூடிய நிலையாகும்.
4) இதன்போது $Na^-$ இனது செறிவு நரம்புக்கலத்திற்கு வெளியே இருப்பதனை விட நரம்புக்கலத்தினுள் மிக உயர்வாகக் காணப்படும்.
5) இது நரம்புக்கலத்தின் முதலுரு மென்சவ்வில் ஏற்படுகின்றது.

36) மானிடப் பெண்ணில் சூலிடல் நிகழும் காலத்தில் குருதியில் அதிகளவு செறிவில் காணப்படும் ஓமோன்?
1) FSH 2) LH 3) Inhibin
4) Oestrogen 5) GH

37) மனிதத்தோலின் கட்டமைப்பு, தொழில் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது,
1) மனிதத்தோலின் மேற்றோல் இருபடைகளைக் கொண்டது.
2) மனிதனின் மேற்றோலில் உள்ள பசினியன் சிறுதுணிக்கை அமுக்கத்துக்கு உணர்வுடையது.
3) மனிதத்தோலின் வியர்வைச் சுரப்பிகளினால் கிரியற்றினைன் கழிவுப்பொருளாக வெளியேற்றப்படும்.
4) தோலின் நெய்ச்சுரப்பிகளின் சுரப்புக்கள் தோலின் மேற்பரப்பையும், மயிரினையும் வளையக்கூடியதாகப் பேணும்.
5) மனிதத்தோலின் உட்தோல் தசையிழையத்தினால் ஆக்கப்பட்டது.

38) புகைக்கும் பழக்கம் காரணமாக ஏற்படும் நுரையீரல் நோய்களில் Emphysema ஒன்று, இதற்கு காரணம் புகையில் உள்ள சில பதார்த்தங்களினால்,
1) பிசிர்க்கலங்களில் பிசிர் அசைவு நிரோதிக்கப்படுதல்.
2) நீர்ப்பகுப்பு நொதியங்களினால் சிற்றறைச்சுவர் அழிக்கப்படுதல்.
3) Carboxyhaemoglobin தோன்றுதல்.
4) சுவாசக்குழாய்களில் அழற்சி ஏற்படுதல்.
5) சுவாசப்பைக்குழாய் மேலணிக் கலங்களில் கலப்பெருக்கத்தினைத் தூண்டுதல்.

39) வைரசுகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) பெரும்பாலான தாவர வைரசுகள் கருப்பதார்த்தமாக DNA ஐக் கொண்டவை.
2) எல்லா வைரசுக்களும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணிகளாகும்.
3) இவை யாவும் கல ஒழுங்கமைப்பு அற்றவை.
4) உயிருள்ள கலங்களில் மாத்திரமே வைரசுக்கள் தம்மை பெருக்கிக்கொள்ளும்.
5) சில வைரசுக்கள் அவற்றின் கப்சிட்டுக்களில் பொலிமரேசு எனும் நொதியத்தைக் கொண்டுள்ளன.

40) சூழல் வெப்பநிலை மனிதனின் உடல் வெப்பநிலையிலும் குறைவடையும் போது மனிதனில் நடைபெறாத செயற்பாடு,
1) தோலின் கீழான குருதிமயிர்க்குழாய்கள் சுருக்கமடைதல்.
2) மயிர்நிறுத்தி தசைகள் சுருக்கமடைதல்.
3) குருதியில் தைரொக்சின், அதிரீனலின் ஓமோன்களின் அளவு குறைவடைதல்.
4) வியர்வைச் சுரப்பிகளின் தொழிற்பாடு நிரோதிக்கப்படும்.
5) குரோசின் குமிழ்கள், சுயாதீன நரம்பு முடிவிடங்கள் தூண்டப்படும்.

**41 தொடக்கம் 44 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் ஒன்று சரியானது / ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவை. விடைகளுள் எது சரியானது / சரியானவை என முடிவு செய்க. பின்னர் பொருத்தமான இலக்கத்தை தெரிந்தெடுக்க.**

A,B, D ஆகியன சரியானவை எனின் ........................................ 1
A, C, D ஆகியன சரியானவை எனின் ........................................ 2
A, B ஆகியன சரியானவை எனின் ........................................ 3
C, D ஆகியன சரியானவை எனின் ........................................ 4
வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியெனின் .............. 5

| பொழிப்பாக்கிய பணிப்புரைகள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| A,B,D சரியானவை | A,C,D சரியானவை | A,B சரியானவை | C,D சரியானவை | வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியானவை |

41) பச்சைய உருமணியின் தைலக்கோயிட்டுக்களில் சூரியசக்தி, இரசாயன சக்தியாக மாற்றிடு செய்யப்பட்டிருக்கும் சேர்வை / சேர்வைகள்.
1) ATP 2) NADPH 3) NADH 4) மாப்பொருள் 5) $O_2$

42) குருதியின் கனவளவை அதிகரிக்கச் செய்வதில் ஈடுபாடு காட்டும் ஓமோன் / ஓமோன்கள் எது/ எவை?
A) ADH B) Aldestrone C) LH
D) Renin E) தைரொக்சின்

43) உயிரின் பாகுபாட்டில் Pylum Echinodermata களுக்கு தனித்துவமான இயல்பு / இயல்புகள் எது / எவை?
A) அகவன்கூடு காணப்படுதல்
B) குழாய்ப்பாதங்கள் காணப்படுதல்.
C) ஈராரைச்சமச்சீரைக் கொண்டிருத்தல்
D) நீர்க்கலன் தொகுதி காணப்படுகின்றமை
E) வறுகி காணப்படுதல்.

44) Eukaryota கலம் ஒன்றின் கலவட்டச் செயன்முறையின் போது தானாகவே இரட்டிப்படையும் கலப்புன்னங்கம் / கலப்புன்னங்கங்கள் எது / எவை?
A) இழைமணி B) நிறமூர்த்தம் C) பச்சையவுருமணி
D) புன்மையத்தி E) புன்கரு

# உளநலம் உயர்ந்த சமூகமே நாட்டின் சிறந்த வளமாகும்

## -கரைச்சி பிரதேச செயலர்-

(கிளிநொச்சி)

உளநலம் உயர்வாக உள்ள சமூகமே நாட்டின் சிறந்த வளமாகும் என கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப்பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கிளிநொச்சி மாவட்ட உளசமூக வலைப்பின்னல் ஊடாக கிராம மட்ட தொண்டர்களுக்கான பயிற்சி நெறி கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையில் இடம்பெற்றது. கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் செல்வி சிவகாமி இராசதுரை உட்பட பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். பிரதேச செயலர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில் " போர் அனர்த்தங்களில் இருந்து மீண்ட கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு இது போன்ற சமூக வலைப்பின்னல் உருவாக்கப்படுவது சிறந்த மக்கள் சேவை கிடைப்பதற்குரிய வழியை ஏற்படுத்தும். கிராம மட்டத்தில் இயங்கும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அரச துறையில் உள்ளோரும் , அரச சார்பற்ற துறையில் உள்ளோரும் இதில் இணைந்திருப்பது சிறப்பானதாகும். அபிவிருத்தி பணிகள் யாவும் திறம்பட நிலை பெறுவதற்கு இது இன்றியமையாததாகும். என்றார்.

வரோட் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர்கள் , குடும்ப புனர்வாழ்வு நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர்கள் , கரித்தாஸ் கியூடெக் நிறுவன தொண்டர்கள் , சமூக சேவைகள் அமைச்சின் சிபிஆர் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி , கண்டாவளை,பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றுகினறனர். உளசமூக வேலைத் திட்டங்களிலும் வளவாளர்களாக மாவட்ட உளவள துணையாளர் தேவராஜா துஸ்யந்தன்,கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சமூகப் பணியாளர் வேலுப்பிள்ளை ,இராஜேந்திரா , மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வேதநாயகம் தபேந்திரன் , தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ். செந்தூரன். மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி . எஸ் . ரதிதேவி மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர் திருமதி உமாநிதி கணேசநாதன் ,ஆகியோர் கலந்து கொண்டனர். (90)

# விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

மின்னேரியாவில் தலைமைத்துவப் பயிற்சிக்குச் செல்லும் மாணவர்களுக்காக விசேட பேருந்துச் சேவை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து தலைமைத்துவப் பயிற்சிக்காக மின்னேரியா செல்லவிருக்கும் மாணவர்களினதும் மற்றும் கல்வி சார் அமைப்புக்களினதும் வேண்டுகோளிற்கிணங்க நாளை காலை 5.00 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விசேட பேருந்துச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என யாழ்.சாலை முகாமையாளர் செ. குலபாலச்செல்வம் அறிவித்துள்ளார்.


# மைதானம் சிரமதானம்



ஒலுமடு லயன்ஸ் ,இளைஞர் கழகத்தினால் ஒலுமடு அ.த.க பாடசாலையின் மைதானத்தின் சிரமதானப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

ஒலுமடு அ.த.க. பாடசாலையின் விளையாட்டு மைதானம் பாடசாலை விடுமுறை காலத்தில் பற்றைகள் மூடி காணப்படுவதனால் இதனைத் துப்பரவு செய்யும் வகையில் ஒலுமடு லயன்ஸ் இளைஞர கழகத்தினர் சிரமதானம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (40)

# கவிழ்ந்தது கார் உயிர் தப்பினார் சாரதி



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் காரொன்று விபத் துக்குள்ளானதில் சாரதி அதிஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

கொட்டாவ நுழைவாயில் பகுதியில் காரொன்று தலை கீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தினால், காருக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆணின் சடலம் மீட்பு


(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றுக் காலை ஆண் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தின் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில் புளியங்குளம் பிரதேசத்திலேயே இச்சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா, கல்மடு கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் தியாகராசா (வயது 54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மரணம் தொடர்பில் மடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்கள் சுற்றுலா



(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மகா வித்தியாலத்தைச் சேர்ந்த 16 மாணவர்களும் வித்தியானந்த மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 24 மாணவர்களும் இணைந்து கொழும்பிற்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

ஆசிரியர்களும் பெற்றோரும் இணைந்த இந்தச் சுற்றுலாவை முல்லைத்தீவு பாதுகாப்பு தலைமையகம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த இரண்டு நாள் சுற்றுலாவின்போது மாணவர்களுக்கு இராணுவ முகாமில் விருந்தோம்பலும் அணிநடைக்கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த மாணவர்கள் குழுவினர் கொழும்பின் முக்கிய இடங்களான அரும்பொருள் காட்சியகம், துறைமுகம் மற்றும் காலி முகத்திடல் ஆகிய வற்றுக்கும் விஜயம் செய்தனர் கடந்த 11,12ஆம் திகதியில் இச்சுற்றுலா இடம்பெற்றது.

# உடையும் நிலையில் பாலங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை வீதியிலிருந்து கஸ்தூரியார் வீதியின் ஆரம்பத்தில் நவீன சந்தைப் பகுதியினை இணைக்கும் நிலையில் உள்ள ,இரண்டு பாலங்கள் உடையும் அபாயத்தில் உள்ளன.

பாலங்களின் கம்பிகள் வெளித்தெரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவை 1972ஆம் ஆண்டில் கட்டப்பட்டிருப்பினும் இன்று வரை எதுவித புனரமைப்புப் பணிகளும் இடம்பெறவில்லை.

எனினும் அந்தப் பாலத்தின் கரைகளில் விளம்பரப் பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. (48)

# ஆணை விழுங்கிய பெண்

(கொழும்பு)

ஆண் விலங்கொன்றை அதே இனத்தைச்சேர்ந்த பெண் விலங்கொன்று விழுங்கிய சம்பவமொன்று தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இரண்டு அனகொண்டாக்களுக்கு இடையில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னரே ஆண் அனகொண்டாவை பெண் அனகொண்டா விழுங்கிவிட்டது.

பெண் அனகொண்டா 10 அடி நீளமானது என்றும் ஆண் அனகொண்டா 9 அடி நீளமானது என்றும் மிருக காட்சிசாலையின் சேவையாளர்கள் தெரிவித்தனர்.

பெண் அனகொண்டாவுக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்றும் சேவையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# "மூன்றாவது எண்ணம்" வெளியீடு

தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ட அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் எழுதப்பட்ட "மூன்றாவது எண்ணம்" தொகுப்பு நேற்றுமுன்தினம் மாலை அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

வாராந்தம் சிலுமின பத்திரிகையில் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய எழுதி வெளியிட்ட ஆக்கங்களின் தொகுப்பே "மூன்றாவது எண்ணம்" என்ற பெயரில் வெளியிடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஆர். பி.சூரியப்பெரும உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இராணுவப்புரட்சி முறியடிப்பில்; தெற்கு சூடானில் 500 பேர் பலி



தெற்கு சூடானில் ஜனாதிபதிக்கு எதிரான இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டதில், 500 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா சபை அறிவித்துள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபை தகவல்

ஆபிரிக்க நாடான தெற்கு சூடான் தலைநகரில் கடந்த 15ஆம் திகதி இரவு திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது. இதில் முன்னாள் துணை ஜனாதிபதி ரியக் மானசரின் ஆதரவு இராணுவ வீரர்கள் ஈடுபட்டனர். இந்தப் புரட்சி 2 நாட்களில் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புரட்சியில் ஈடுபட்டதாக முன்னாள் நிதி அமைச்சர் கோஸ்டி மானிப், முன்னாள் நீதித் துறை அமைச்சர் ஜோன் லக் ஜோக், முன்னாள் உள்துறை அமைச்சர் ஜியர் சங்அலங் உட்பட10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவ புரட்சியின் போது 500 பேர் வரை பலியாகி இருப்பதாக ஐ.நா சபை அறிவித்துள்ளது. ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள 54 ஆவது நாடான தெற்கு சூடான் கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி தான் தனி நாடாக உதயமானது குறிப்பிடத்தக்கது.

# வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இரகசிய வாக்கெடுப்பு

## ரயில்வே ஊழியர்கள் அதிரடி




இந்தியாவின் தெற்கு ரயில்வே ஊழியர்களின் நாடு தழுவிய காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கான இரகசிய வாக்கெடுப்பு இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

தெற்கு ரயில்வேயில் பணியாற்றும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வாக்களிக்க வசதியாக தாம்பரம், செங்கல்பட்டு, பெரம்பூர்,அரக்கோணம், மதுரை, இராமேஸ்வரம் உள்ளிட்ட பெரிய மற்றும் சிறிய ரயில் நிலையங்கள் என 1,000 இடங்களில் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் வசதிக்காக ஆங்கிலம், தமிழ், மலையாளம், இந்தி மற்றும் தெலுங்கு மொழியில் வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டுள்ளது. .66.13 சதவீதம் பேர் ஆதரவாக வாக்களித்தால், வேலை நிறுத்தப் போராட்டம் நடாத்தப்படும். வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு முறைப்படி அரசிடம் கடிதம் கொடுக்கப்படும்.என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வைரப்படிமங்கள்



அந்தாட்டிக்கா பனிப்பிரதேச மலைகளில் வைரப் படிமங்கள் இருப்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.


கிழக்கு அந்தாட்டிகாவில் கிம்பர்லைட் வகைப் பாறைகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதன் மூலம் அங்கு வைரப் படிமங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆபிரிக்கா, சைபீரியா, அவுஸ்ரேலியா பகுதிகளில் கிம்பர்லைட் பாறைகள் கண்டறியப்பட்ட இடங்களில்தான் வைரங்கள் தோண்டியெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், வர்த்தக ரீதியாக அந்தாட்டிக்காப் பகுதியில் கனிமங்கள் தோண்டியெடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. கிம்பர்லைட் எனப்படும் எரிமலைக் கற்களில் வைரங்கள் உள்ளன. இவ்வகைக் கற்கள் பூமியில் அரிதாகவே உள்ளன. அந்தாட்டிக்காவில் கிம்பர்லைட் பாறைகள் கண்டறியப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

அங்கு ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் தலைமையிலான குழு இதனைக் கண்டறிந்துள்ளது.

**உலகச் செய்திகள்**

# சட்டமன்ற உறுப்பினர்களை 10கோடிக்கு வாங்க முயற்சி

## ஆம் ஆத்மி கட்சி குற்றச்சாட்டு



(புதுடில்லி)

இந்தியாவில் ஆம் ஆத்மி கட்சியின் சட்டசபை உறுப்பினர்களை 10 கோடி ரூபாய்க்கு வாங்க சில அரசியல் கட்சிகள் முயற்சி செய்ததாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றஞ் சாட்டி உள்ளார். இதுகுறித்து அவர் கடந்த புதன்கிழமை பொதுமக்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

சமீபத்தில் நடைபெற்ற டில்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 28 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதற்காக உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். ஆனால், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆட்சி அமைப்பதற்குத் தேவைப்படும் 36 இடங்களில் ஆம் ஆத்மி கட்சிக்கு மேலும் 8 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகிறது. இந்நிலையில், ஆம் ஆத்மி ஆட்சி அமைக்க நிபந்தனையற்ற ஆதரவு தர காங்கிரஸ் முன்வந்துள்ளது. பா.ஜ.க.வும் டில்லிவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டு பிரச்சினை அடிப்படையிலான ஆதரவு வழங்க தயார் என அறிவித்துள்ளது.

இவ்விரு கட்சிகளின் ஆதரவை கோராத நிலையில் அவர்களாகவே ஆதரவு தர முன்வந்துள்ளனர்.

காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க ஆகிய கட்சிகளின் ஆட்சியால் நாட்டில் ஊழல், மதவாதம், குற்றங்கள் பெருகி வருகின்றன. இதிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காகவும் அரசியலை சுத்தப்படுத்துவதற்காகவும் பாமர மக்கள் சார்பில் ஆம் ஆத்மி கட்சி உருவாக்கப்பட்டது. ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது நோக்கமல்ல. என்றார்.

# துணைத்தூதுவர் விவகாரம் இந்திய உறவைப் பாதிக்காது

## அமெரிக்கா தெரிவிப்பு



இந்திய துணைத் தூதுவர் தேவ்யானி கோப்ரகடே கைது விவகாரத்தால், அமெரிக்கா-இந்திய இரு தரப்பு உறவு பாதிக்காது என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்திய துணைத் தூதர் தேவ்யானி கோப்ரகடேவின் ஆடைகளை களைந்து சோதனையிட்ட நடவடிக்கைக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி வருத்தம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலர் ஜே கானரி இது தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில் இந்தியத் துணைத் தூதர் தேவ்யானி மீதான நடவடிக்கை தனித்துவிடப்பட்ட நிகழ்வு அந்த நிகழ்வால், இந்தியாவுடனான அமெரிக்க உறவில் பிரதிபலிக்காது. இந்த விவகாரத்துக்கு முக்கியத்துவம் அளித்து, இந்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் தொடர்ந்து அமெரிக்க தரப்பு பேச்சு நடத்தி வருகின்றது என்றார்.

இதேவேளை, தேவ்யானி மீதான நடவடிக்கை தொடர்பாக, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனனிடம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இந்தியாவில் ஏற்பட்டுள்ள உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளை உணர்ந்து கொண்டுள்ளதாகவும், அந்த நடவடிக்கைக்கு வருந்துவதாகவும் மேலும், வெளிநாடுகளில் பணியாற்றும் அமெரிக்க தூதரக அதிகாரிகளின் மதிப்பும், கண்ணியமும் காப்பாற்றப்பட வேண்டும் என்று நினைப்பதைப் போலவே, பிறநாட்டு தூதரக அதிகாரிகளின் கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டியதும் அவசியம் என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய துணைத் தூதர் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்த போதிலும், இந்த விவகாரத்தில் மன்னிப்புக் கோர அமெரிக்க அரசு மறுத்துள்ளது.

# ஒருநாள் வருமானம் 450கோடி

அமெரிக்க தொழிலதிபரும், முதலீட்டாளருமான வாரன் பஸ்பெட் இந்த ஆண்டில் சராசரியாக ஒருநாளில் இலங்கையின் ரூபா மதிப்பில் 450கோடி ரூபா சம்பாதித்துள்ளார்.

இந்த ஆண்டில் அதிக வருமானம் ஈட்டிய நபரும் அவர்தான் என்று வெல்த் எக்ஸ் ஊடக நிறுவனம் கூறியுள்ளது. 2013ஆம் ஆண்டில் டிசம்பர் 11ஆம் திகதி வரை 12.7 பில்லியன் அமெரிக்க டொலர்களை அவர் ஈட்டியுள்ளார்.

எனினும் இந்த ஆண்டின் பெரும் கோடீஸ்வரர்கள் பட்டியலில் வாரன் பபெட் முதலிடம் பெறவில்லை, இரண்டாவது இடத்திலேயே உள்ளார். இதில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ் முதலிடத்தில் உள்ளார். மூன்றாவது இடத்தில் சூதாட்ட விடுதிகளை நடாத்தி தனிச் சாம்ராஜ்ஜியம் அமைத்துள்ள சிங்கப்பூரைச் சேர்ந்த ஷெல்டன் அடெல்டன் உள்ளார்.

# வேலை வாய்ப்பு வழங்குவதில் தமிழகம் பின்னடைவு



(சென்னை)

வேலை வாய்ப்புகளை வழங்குவதில் தமிழகம் மிகவும் பின்தங்கியுள்ளது என்று 'டீம்லீஸ்' எனும் நிறுவனத்தின் ஆய்வு தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வை நடாத்திய டீம்லீஸ் நிறுவனத்தின் மூத்த துண்ணைத் தலைவர் ரிதுபர்னா சக்கரவர்த்தி, தெரிவிக்கையில் தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உற்பத்தி துறைகளில் வேலைவாய்ப்பு குறைந்து வருகிறது.தமிழகத்தில் சில்லறை வர்த்தகம், உட்கட்டமைப்பு, தொலைத்தொடர்பு உள்ளிட்ட துறைகளில் வேலை வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.இருந்தா லும் அரசிற்கு வருவாய் அளிக்க கூடிய தகவல் தொழில்நுட்பம், உற்பத்தித்துறை,பொறியியல் துறைகளில் போதுமான அளவு வேலைவாய்ப்புகள் இல்லை. அதுமட்டுமின்றி நாடு முழுவதும் சுகாதாரம் மற்றும் மருந்து உற்பத்தித்துறை ஏறுமுகத்தில் இருக்கையில்தமிழகத்தில் மட்டும் இத்துறையில் சொற்ப வேலை வாய்ப்புகளே உள்ளன. இவற்றை வைத்து பார்க்கையில், வேலை வாய்ப்புகளை வழங்குவதில் தமிழகம் மிகவும் பின்தங்கியுள்ளது என்றார்.

### தொண்டர்களாகக் கடமையாற்றும்

# குடும்பநல உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் தொண்டர்களாக கடமையாற்றி வரும் குடும்பநல உத்தியோகத்தர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து நேற்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மாதாந்தம் 6000 ரூபா கொடுப்பனவைப் பெற்று கடந்த 10 முதல் 15 வருடகாலமாக கடமையாற்றிவரும் தமக்கு சுகாதார அமைச்சு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று தெரிவித்து அவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் தமது கோரிக்கைகளை உரக்கக் கத்தியவாறும் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சுமார் 50 இற்கும் மேற்பட்ட இந்தக் குடும்பநல உத்தியோகத்தர்கள் தம்மைப் போன்று யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 300 வரையானவர்கள் பல நெருக்கடிகளின் மத்தியில் சேவையாற்றி வருவதாகவும் தமது நிலையைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமகது நிரந்தர நியமனத்தைப் பெற்றுத் தரவேண்டுமென்றும் தெரிவித்துள்ளனர்.

முற்பகல் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தை பிற்பகல் முடித்துக்கொண்டனர். மேலும் தமது கவனயீர்ப்பு போராட்டம் இன்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (பா,இ)

## மனித உரிமை ஆணைக்குழுவிலும் கையளிக்கப்பட்டது மகஜர்

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் தொண்டர்களாக பணியாற்றி வந்த குடும்பநல உத்தியோகத்தர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்துள்ளனர்.

நேற்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் முன்பாக கவனயீர்ப்பு ஆர்பபாட்டத்தில் ஈடுபட்ட இவர்கள் நேற்றுப் பிற்பகல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்திற்கு சென்று இந்த முறைப்பாட்டைப் பதிவுசெய்ததுடன், மகஜர் ஒன்றையும் கையளித்ததாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 50 இற்கும் மேற்பட்ட தொண்டர் பணியாளர்களே இவ்வாறு முறைப்பாட்டைப் பதிவு செய்ததுடன், அதனைத் தொடர்ந்து வடமாகாண சுகாதார அமைச்சின் காரியாலயத்திற்கும் சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,இ)

## இரத்தப் பரிசோதனைக்கு வந்தவர் தங்கச் சங்கிலியை பறிகொடுத்தார்

### யாழ். போதனாவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரத்தப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு வந்த மூதாட்டிக்கு உதவுவதாகக் கூறிய நபர் தங்கச் சங்கிலியுடன் மாயமானார்.

நேற்று தீவகப் பகுதியிலிருந்து இரத்தப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்த மூதாட்டிக்கு தான் வைத்தியசாலை ஊழியர் என்று அறிமுகப்படுத்திய நபர் ஒருவர் பரிசோதனைக்கா உட்செல்லும் போது தங்க ஆபரணங்கள் அணியக்கூடாது என்று கூறி மூதாட்டியிடம் இருந்து 6 பவுண் தங்கச் சங்கிலியைப் பெற றுள்ளார்.

மூதாட்டியும் இரத்தப் பரிசோதனை முடித்து வெளியே வந்து பார்த்ததும் திகைத்துப் போனார். தங்கச் சங்கிலியைப் பெற்றவர் மாயமாகி விட்டார். இதுவிடயம் குறித்து மூதாட்டி யாழ். பொலிஸில் முறையிட்டுள்ளார். (இ)

### மத்திய அரசுடன்....

அரசுடனும் இணக்க அரசியலை முன்னெடுக்கவே விரும்புகின்றோம். மாகாண சபை என்ற கனவுக் குழந்தை இன்று நனவாகியுள்ளது. இதனை பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டியதே முக்கிய பொறுப்பாகும். இணக்க அரசியல் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென்பதை நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

அந்த வகையில் அதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட வேண்டுமென்பது மட்டுமன்றி உருவாக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தையும் நாம் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதனொரு கட்டமாகவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு நாம் அழைப்பு விடுத்திருந்த போதிலும் தவறான புரிந்துணர்வு காரணமாக அவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை இருந்த போதிலும் எமது முயற்சிகள் தொடருமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றைய தினம் தமது தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியதாகவும் அதன்போது அரசியல் தீர்வை பொறுத்த வரையில் அதன் அவசியம் குறித்து இக்கலந்துரையாடலில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணமுடியுமென தமக்கு தெரிவித்ததாகவும் இத்தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணைந்து கொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது குறித்த விடயம் தொடர்பாக தாம் அவருக்கு எடுத்து விளக்கியதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதுமட்டுமல்லாது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்வது தொடர்பாக தாம் ஏற்கனவே அதன்தலைவர் இரா.சம்பந்தனுடன் ஏற்கனவே கலந்துரையாடியதையும் இதன் போது நினைவுகூர்ந்தார்.

இவ்விடயத்தில் அரசு நியாயம் மீறி நடக்கும் பட்சத்தில் அதையும் நாம் எதிர்ப்போம் என்றும் அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

அந்த வகையில் தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவையும் உருவாகிவரும் சூழ்நிலையையும் நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்த அவர், அதற்கேற்ற வகையில் கனிந்து வருகின்ற அருமையான சந்தர்ப்பங்களை தமிழ் கட்சிகள் நன்கு சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும், தெரிவுக்குழுவில் விடுபட்டு போனவர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் மறைந்த முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பழிவாங்கும் உணர்வுடன் ஒருபோதும் செயற்பட்டதில்லையென்றும் நெல்சன் மண்டேலா என்பது ஒரு தத்துவமே என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்லாமல் ஊடகவியலாளர்களுக்கும் சமூக கடமைகள் உள்ளன. அதையுணர்ந்து கொண்டு சகலரும் சமூக மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா, ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஸ்ராலின் ஆகியோர் உடனிருந்தனர்.

### போராட்டத்திற்கு...

தமது போராட்டத்தை கைவிடுவதாக சுகாதாரத் தொண்டர்கள் நேற்று மாலை தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா, அபிவிருத்திக் குழுத் தலைவர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் தொண்டர்கள் சார்பில் 4 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். (பா,இ)

### புலமைப்...

எழுந்த நிலையில் அது குறித்து கல்வியமைச்சு பல்வேறு தரப்பினரிடமும் ஆலோசனை நடத்தியிருந்தது. இந்நிலையில் நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டிலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற மாட்டாதென அறிவித்துள்ளார்.

### பெறுபேறுகளை...

வருட, 4 ஆம் வருட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாதுள்ளமை குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்துடன் பேசியபோதிலும் தீர்வு எதுவும் எட்டப்படாத நிலையில் தாம் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர். (இ,25)

### கணக்கெடுப்பு...

இதனைத் தவிர ஏனைய பகுதிகளில் இந்தத் தகவல்களை திரட்டும் பணிகள் இன்று நிறைவடையவுள்ளதாக, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.சீ.குணவர்தன தெரிவித்தார்.

குறிப்பாக கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் கணக்கெடுப்பாளர்கள் சென்று தகவல்களை சேகரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே, பூரணமாக புள்ளிவிபரங்கள் திரட்டும் பணிகள் நிறைவடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

### தெரிவுக்...

மன்ற தெரிவுக்குழுவின் காலம் யூன் மாதம் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தெரிவுக்குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன புறக்கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### இலங்கை...

குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு உறுப்பு நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறுதில் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து எவ்வாறான தீர்மானமொன்றை முன்வைப்பது என்பது குறித்து விவாதிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிக்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு திரட்டப்படும் எனவும் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமான சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடு எனவும் ஹியுகோ ஸ்வெயர் தெரிவித்துள்ளார்.

### எச்.ஐ.வி...

சிறுவர்களுமாக இதுவரை 51 சிறுவர்கள் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் வைத்திய அதிகாரி வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்தார்.

மேலும் ஆண் குழந்தைகளை விட அதிகமாக பெண் குழந்தைகளே எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் ஆனால் இதுவரை 14 சிறுவர்களே இதற்கான சிகிச்சையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பில் 27 பேரும் கண்டியில் 7 பேரும் கம்பகா மற்றும் குருநாகல் மாவட்டத்தில் 5 பேரும் இதுவரை எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இலங்கையில் இந்த மாவட்டங்களிலே அதிகமாக எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

### ஆளுநருடன்...

செயலகத்தில் அல்லது யாழ். பொதுநூலகத்திலுள்ள வட மாகாண சபையின் மாநாட்டு மண்டபத்தில் இருவரும் சந்தித்து மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடலாமெனத் தெரிவித்திருந்ததாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் வழமைபோன்று சந்திப்பைத் தவிர்க்கும் வகையில் எதிர்மறையான பதிலையே முதல்வர் அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபையின் சீரான செயற்பாடு, மக்களுக்கான தேவைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மூன்று முறை ஆளுநர் அழைத்தபோதிலும் அதனை தட்டிக்கழித்துள்ள முதல்வர் தொடர்ந்தும் ஆளுநருடன் முரண்பாடான போக்கை கடைப்பிடிப்பதன் மூலம் வடமாகாண சபையின் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றார் என பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்புகின்றனர்.

ஜனாதிபதியே மாகாணத்தின் ஆளுநரை நியமித்தார். எனவே ஆளுநரை மாற்றவேண்டுமெனில் ஜனாதிபதியுடனே பேச்சு நடத்த வேண்டும். இதனைவிடுத்து மாகாண செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல ஆளுநர் தடையாக உள்ளார் என தொடர்ந்து கூறிக்கொண்டிருப்பதனால் மக்களுக்கான சேவையை எவ்வாறு மேற்கொள்ள முடியுமென பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

# வெளிநாட்டு கைதிகள் 323 பேர் சிறைச்சாலைகளில்

## ஆணையாளர் குலதுங்க தகவல்

சிறைகளில் தற்போது 323 வெளிநாட்டவர்கள் கைதிகளாகத்தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் 306 ஆண்கைதிகளும் 17 பெண்கைதிகளும் உள்ளடங்குவதாக சிறைச் சாலைகள் ஆணையாளர் K.M.G.B. குலதுங்க தெரிவித்துள்ளார்.

306 ஆண் கைதிகளில் உகண்டா, மாலைதீவு, லிபேரியா, சிரியா, ஜேர்மன், ஜோர்தான், மாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒரு கைதியும், நேபாளம், ஆப்கான், துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா இரண்டு கைதிகளும், ஈரான், சீனா, பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா மூன்று கைதிகளும், நான்கு இஸ்ரேலியர்கள், நான்கு உக்ரேனியர்கள், ஐந்து பங்களாதேசத்தவர்கள், எட்டு நைஜீரியர்கள், 43 பாகிஸ்தானியர்கள் மற்றும் 220 இந்தியர்கள் உள்ளடங்குவதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 306 வெளிநாட்டு ஆண் கைதிகளில், ஒருவருக்கு மரணதண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், நான்கு பேர் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இருவர் அரச சொத்திற்கு சேதம் விளைவித்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் இருவர் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறுவர் மீறல் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். மேலும் ஐவர் போதைப் பொருள் வைத்திருந்ததாகவும் மேலும் எட்டுப் பேர் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்ட நடைமுறைகளை மீறியதாகவும், 12 பேர் மோசடிகள் செய்ததாகவும் 33 பேர் தீர்ப்பளிக்கப்பட்டும் 39 பேர் மிகவும் ஆபத்தான போதைப் பொருட்களை வைத்திருந்த சந்தேகத்தின் பேரிலும் குற்றம் சாட்டப்பட்டு உள்ளனர். இவர்களில் 200 இந்திய மீனவர்களும் உள்ளனர்.

இதேபோன்று தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 17 வெளிநாட்டு பெண் கைதிகளுள் சீனா, உக்ரேன், உகண்டா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவரும், இரண்டு இந்தியர்கள் மற்றும் ஒன்பது பாகிஸ்தானியர்களும் உள்ளடங்குவர். இவர்களில் ஒருவர் கொள்ளைச் சம்பவத்துடனும், இன்னொருவர் சிறுவர் மீறல் தொடர்பிலும், மற்றொருவர் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறியதாகவும், இருவர் கொலைக் குற்றம் சாட்டப்பட்டும், நான்கு பேர் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டும், போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் எட்டுப் பேர் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளனர்.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களில் 140 பேர் திருகோணமலையில் உள்ளதாக குலதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உடல்நலன் தரும் யோகாசனப் பயிற்சி

## நல்லூரில் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சியின் அறிமுக நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர் தேரடி அருகே) எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோக அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

யோகா பயிற்சி வகுப்புக்கள் காலை 6.00மணி தொடக்கம் 7.00மணி வரை தொடர்ந்து 20 நாட்கள் நடை பெறும். உடல், உள ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமான ஆசனப்பயிற்சிகள், சூரியநமஸ்காரம், பிராணாயாமம், சாந்த வழிமுறை மற்றும் தியானப் பயிற்சிகள் தெரிவு செய்யப்பட்டு அனுபவமுள்ள யோகா ஆசானால் நுட்பமாகப் பயிற்சி வழங்கப்படுவதுடன், கையேடுகளும் வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சிநெறியில் இணைந்து பயன்பெற முடியும். அறிமுக நிகழ்விலும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ். யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# மாப்பண்டங்களுக்கு தடை

பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் மாவினால் செய்த பண்டங்கள் மற்றும் இனிப்பு குளிர்பானங்கள் விற்பனை செய்வது அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் தடை செய்யப்படும் என ஆளும் கட்சியின் பிரதம கொரடாவான தினேஷ் குணவர்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் 2011 ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல வாய்மூல பதிலுக்காக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

# மதுக்கடையை அகற்றுங்கள்; மக்கள் திரண்டு பேரணி

## மன்னாரில் எதிர்ப்பலை

(மன்னார்)

மன்னார் பெரியகடை கிராமத்தில் தனியார் ஒருவருடைய வீட்டில் அமைக்கப்பட்டு வரும் மதுக்கடையினை உடனடியாக அகற்றக்கோரி அப்பிரதேச மக்கள் எதிர்ப்பு பேரணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் பெரியக்கடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், பெரிய கடை கிராம மக்களும் இணைந்து குறித்த மது விற்பனை நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர்.

ஊர்வலமாக மன்னார் நகர சபையை அடைந்த மக்கள், நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் ஆயோரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த மக்கள் பேரணியாக சென்று மன்னார் பிரதேசச் செயலக அதிகாரிகளிடம் மகஜரை கையளித்தனர்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, உட்பட அக்கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

நீர் வடிகாலமைப்பு மற்றும் சமுர்த்தி உதவித்திட்டம் ஆகியவற்றிற்கு இக்கிராம மக்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை தவறான முறையில் பயன்படுத்தி இக்கிராம மக்களும் ஆதரவு வழங்குவதாக கோரி குறித்த மது விற்பனை நிலையத்தினை அமைத்து நடத்தி வருவதாக பேரணியில் ஈடுபட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# உள்ளூராட்சி சட்டத்தில் விரைவில் மறுசீரமைப்பு

தேவை ஏற்படின் உள்ளூராட்சி சட்ட மூலத்தை திருத்தி அமைக்கும் நடவடிக்கை எடுப்பதற்கு தாம் எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில உள்ளூராட்சி மன்றங்களின் வரவு-செலவுத் திட்டம் தோல்வி அடைந்த நிலையில் அரசாங்கத்தில் குழப்பங்கள் காணப்படுவதாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் அவ்வாறான குழப்பங்க்ள் எவையும் அரசாங்கத்தினுள் இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உள்ளூராட்சி சட்ட மூலத்தை மறுசீரமைத்து, ஏற்கனவே இருந்த நிலைமைக்கே கொண்டு வரவதற்கும் தாம் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# இளவயதுக் கர்ப்பம் வேகமாக அதிகரிப்பு

(கொழும்பு)

பருவமடைந்த சிறுமிகள் திருமணம் செய்யும் வயதை அடையும் முன்னர் கர்ப்பம் தரிப்பது அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடமத்திய மாகாணம் மற்றும் மொனராகலை போன்ற பின் தங்கிய பிரதேசங்களில் இந்தச் சமூக சீர்கேடு நிலைமை அதிகரித்து காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இணையத்தளம் மற்றும் செல்போன்கள் மூலமாக ஆபாசப் படங்களை பார்ப்பது, கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் என்பன காரணமாக இந்த சம்பவங்கள் அதிகரித்தன.

பின்தங்கிய பிரதேசங்களிலேயே வயது குறைந்த சிறுமிகள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்து காணப்படுகிறது.

அப்பிரதேசங்களில் உள்ள 13 முதல் 14 வயது வரையுள்ள சிறுமிகள் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சூழ்நிலை அதிகரித்துக் காணப்படுகிறது.

இவ்வாறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகளின் தாய்மார் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர்.

இதனால் இந்தப் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பில் உள்ள உறவினர்களினால் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

சிறுவயது கர்ப்பம் தரிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், அது பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மனித உரிமை பாதுகாப்பு; உலகுக்கு உண்மை புரிகிறது

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை பாதுகாப்பு தொடர்பான உண்மை நிலைமை இப்போது உலகுக்கு புரிந்தது என்றும், இதனால் இலங்கை குறித்த உலக நாடுகளின் நன்மதிப்பு உயர்வடைந்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீப மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

கிரமமான முறையில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை உலக நாடுகள் புரிந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சீனா, ரஸ்யா, வியட்நாம், கியூபா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய மனித உரிமை நிலைமைகள் குறித்து அரசாங்கம் துல்லியமான தகவல்களை வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு 195750 பேர் இராணுவத்தினரால் யுத்த வலயத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும் அவர்களை படையினர் கைது செய்யாது, உணவுவையும் இரத்தத்தையும் வழங்கி காப்பாற்றியதாகவும் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார.

14000 கடுமையான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### பெற்றோலுக்கு தட்டுப்பாடு மல்லாவியில் நேற்று

மல்லாவியில் நேற்று திடீரென பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது

இதனால் வாகன உரிமையாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 11.00 மணிக்குப் பின்னர் மல்லாவியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் முழுமையாக தீர்ந்து விட்டது. இதனால் பலர் அங்கு வாகனங்களுடன் காத்திருந்தனர். (140)

# ஐஸ்கிறீம் வானுக்கு தண்டம் விதிப்பு

யாழ். நீதிமன்றத்திற்கு முன்னால் ஐஸ்கிறீம் வானில் பாடலை ஒலிக்கவிட்டபடி சென்றவருக்கு யாழ்.நீதவான் நீதிமன்றம் ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மேற்படி ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் வான் பாடலை ஒலிப்பியபடி சென்று கொண்டிருந்தது.

மேற்படி வானை கைப்பற்றுமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டதிற்கமைய பொலிஸார் வானைக் கைப்பற்றியதுடன் அதன் உரிமையாளரைக் கைது செய்து நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, குறித்த நபருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்த நீதவான், இனிமேல் இவ்வாறான தவறுகளைச் செய்ய வேண்டாம் எனக் கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.